பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 15 செவ்வாய்க்கிழமை (29.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 64

# பலாலி மீது நேற்று ஷெல் தாக்குதல்!

# படையினர் பதிலடி; குடாநாடு அதிர்வு!!

## பூநகரிப் பிரதேசத்தில் 'கிபிர்' குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், ஜனவரி 29

நேற்றுக் காலை சுமார் 9.15 மணியளவில் பலாலிப் படைத்தளத்தை நோக்கி, விடுதலைப் புலிகள் பூநகரிப் பகுதியிலிருந்து தொடர்ச்சியாக, ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

அதற்குப் பதிலடியாக படையினர் குடாநாட்டின் பல முனைகளில் இருந்தும் ஷெல், பீரங்கித் தாக்குதல்களையும் பல்குழல் எறிகணை வீச்சுக்களையும் தொடர்ந்து நடத்தினர். அவற்றின் கடும் சத்தத்தால் குடாநாடு அதிர்ந்தது.

பரந்தனுக்கு வடக்கே கல்முனை முனைப் பகுதியைநோக்கித் தாம் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும், விடுதலைப் புலிகள் ஏவிய பதினைந்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் பலாலி விமானத் தளத்தில் வீழ்ந்ததாகவும் அரசாங்கத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகல் 11.45 மணியளவில் 'கிபிர்' விமானங்கள் பூநகரிப் பகுதியில் குண்டுகளை வீசித் தாக்குதல்களை நடத்தின.

கொழும்பில் இருந்து உயர் பாதுகாப்பு அதிகாரிகள் பலாலி விமான நிலையத்தில் இறங்க இருந்த வேளையிலேயே, விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று சில தகவல்கள் தெரிவித்தன.

எனினும், உயர் அதிகாரிகளை ஏற்றிவந்த விமானம் பலாலியில் இறங்கும் முயற்சியைக் கைவிட்டு, கொழும்பு மீண்டது என்றும் வேறு

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'தினகரன்' இணையாசிரியருக்கு நேற்றிரவு கத்திக்குத்து

கொழும்பு, ஜன. 29

அரசாங்க தரப்பு தமிழ் ஊடகமான 'தினகரன்' பத்திரிகையின் இணையாசிரியர் சாஹிப் எம்.காசிம் நேற்றிரவு எட்டு மணியளவில் கத்திக்குத்துக்கு இலக்கானார்.

அவரது வீட்டில் வைத்தே அவர்மீது கத்திக்குத்து நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சிகிச்சைகளுக்காக ஆஸ்பத்திரியில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் நிகழ்வை இலக்குவைத்தே புலிகள் பலாலி மீது தாக்குதல் நடத்தினர்!

### ஆனால் சேதம் எதுவுமில்லை என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜன. 29

பயிற்சிகளை முடித்து வெளியேறிய ஒரு தொகுதி படையினரின் நிகழ்வு பலாலிப் படைத்தளத்தில் நடைபெற்றது. இதனை இலக்குவைத்தே விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு-

விடுதலைப் புலிகள் பூநகரி கல்முனைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இருபது வருடங்களின் பெரும் போர் அழிவுகளுக்கு மஹிந்த மக்களிடம் மன்னிப்பும் கேட்கவேண்டும்

### 13ஆவது திருத்தத்தை இப்போது ஏற்பது காலங்கடந்த ஞானம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 29

1988இல் ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்தை அப்போது எதிர்த்த மஹிந்த ராஜபக்ஷ, இப்போது அதனை அரசியல் லாபம் கருதி ஏற்றிருக்கிறார்.

இருபது வருட யுத்த அழிவுகளுக்கு அவர் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும்.

-இவ்வாறு கோரியிருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. இதனை அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய பிரச்சினைக்கான தீர்வாக 1988இல் ஐக்கிய தேசியக் கட்சி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் படி 13ஆவது திருத்தச் சட்டத்தை முன்வைத்தது.

அதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கடத்தப்பட்ட மீனவர் சுட்டுக்கொலை

### கண்கள் கட்டப்பட்ட நிலையில் சடலம்

மன்னார், ஜன.29

மன்னாரில் அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் ஆயுத முனையில், வீட்டில் இருந்து பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்ட மீன்வியாபாரி ஒருவர் நேற்றுக்காலை 7 மணியளவில் மன்னார், உப்புக் குளத்திற்கு வடக்கே உள்ள நல்லன்னாடிப் பகுதியில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## 60ஆவது சுதந்திரதின நிகழ்வுகளை ஐக்கிய தேசியக் கட்சி பகிஷ்கரிக்கும்

### அன்று சமய வழிபாடுகளில் ஈடுபட முடிவு

கொழும்பு,ஜன.29

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் 60ஆவது சுதந்திரத் தினத்தை ஒட்டி அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அரசு விடுத்திருக்கும் அழைப்பை நிராகரிப்பது என ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியால் இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு இப்போது தொலைத்து விட்டது என்று குற்றஞ்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தட்சணாமருதமடுவில் ஷெல் வீச்சு; 3 பேர் காயம்

மன்னார், ஜன. 29

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார், தட்சணா மருதமடுவில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த நலன்புரி நிலையம் மீது வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை தொடர்ச்சியான ஆட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையான் குழு தனது ஆயுதப் பிரிவை முடக்கி வைத்திருப்பதாக அறிவிப்பு

### தேர்தலை ஒட்டி நடவடிக்கை என்கிறார் அதன் பேச்சாளர்

கொழும்பு,ஜன.29

கிழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக அத்தேர்தலில் போட்டியிடும் பிள்ளையான் குழு (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு) தனது ஆயுதப் பிரிவை முடக்கி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அக்குழுவின் வேட்பாளர்கள் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பொலிஸாரின் பாதுகாப்புடன் மட்டுமே பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் பிள்ளையான் குழு மேலும் தெரிவிக்கின்றது.

பிள்ளையான் குழுவின் ஊடகப் பேச்சாளர் அஸாத் மௌலானாக இத்தகவலை 'உதயனுக்கு' நேற்றுத் தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரச பயங்கரவாதத்தின் எதிர் விளைவுதான் விடுதலைப் புலிகள் நடத்துகின்ற போராட்டம்



இலங்கையில் இனவெறி கொண்ட பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் மற்றும் சிறி லங்கா அரச பயங்கரவாதத்தினது எதிர்விளைவுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்துகிற போர். சென்னையில் நடைபெற்ற கருத்துரிமை மீட்பு மாநாட்டில் பேசுகையில் சிறிலங்காவின் புதிய இடதுசாரி முன்னணியின் மத்திய குழு உறுப்பினரான ரணத்குமாரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் "கண்டனமும் இரங்கலும் தேசத்துரோகமா?" என்ற தலைப்பில் கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் கருத்துரிமை மீட்பு மாநாடு நடைபெற்றது தெரிந்ததே.

அந்த மாநாட்டில் ரணத் குமாரசிங்க உரையாற்றினார். அப்போது அவர்கூறியவை வருமாறு:

ஆறு ஆண்டுகளாக நோர்வே சமரசத்தால் உருவாக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை கடந்த ஜனவரி 2 ஆம் நாள் மகிந்த ராஜபக்ச, ஒருதலைபட்சமாக முறித்துக் கொண்டுவிட்டார்.

தமிழர்களோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை சிறிலங்கா ஒருதலைப்பட்சமாக முறித்துக் கொள்வது இது முதல் முறையல்ல. பல முன்னுதாரணங்கள் உண்டு.

1958 ஆம் ஆண்டில் சிறிலங்கா அரச தலைவர் பண்டாரநாயக்கவுக்கும் செல்வநாயகத்துக்குமிடையே உருவான ஒப்பந்தமும் டட்லி சேனநாயக்கவுக்கும் செல்வநாயகத்துக்கும் இடையே 1966 இல் உருவான ஒப்பந்தமும் இப்படித்தான் முறிக்கப்பட்டன.

தமிழர்கள். இனி ஒப்பந்தங்களைச் செய்து பயனில்லை என்று முடிவெடுத்து ஆயுதப் போராட்டத்தைத் தொடங்க முடிவெடுத்ததற்கு காரணமே - ஏற்றுக்கொண்ட ஒப்பந்தங்களை இப்படி சிறிலங்கா மதிக்காமல் செயற்பட்டதுதான்.

அதன் பிறகுதான் தமிழர்கள் தங்களின் பாரம்பரிய பிரதேசத்துக்கு சுயநிர்ணய உரிமை கோரும் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

### கருத்துரிமை அழிக்கப்பட்டு விட்டது

இந்தப் போரினால் எங்கள் நாட்டில் கருத்துரிமை முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. தமிழர்களின் கருத்துரிமை மட்டுமல்ல- சிங்களவர்- முஸ்லிம்களின் கருத்துரிமையும் பறிக்கப்பட்டுவிட்டது. ஒருநாட்டில் ஜனநாயகம் வளர்கிறது என்பதற்கான அடையாளமே கருத்துரிமைதான்.

போரில் முதல் பலிக்கடாவாவது கருத்துரிமைதான் என்று பல சிந்தனையாளர்கள் கூறியுள்ளனர். கருத்துரிமை என்பது உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு அனைத்துலக உரிமை.

### தகவல்களை அறியும் உரிமை இல்லை

இனம், மொழி, மதம் என்று பாகுபாடுகாட்டாமல் அனைவருக்கும் கருத்துரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் எங்கள் நாட்டில், குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன. சுதந்திரத்துக்கான உரிமை இல்லை - தகவல்களை அறியக் கூடிய உரிமைகள் இல்லை.

அதுவும் ஒடுக்குமுறை போர் என்று வந்துவிட்டால் பொய்யும், திரிபும் இல்லாமல் அதனை நடத்தவே முடியாது.

எனவே ஒடுக்குமுறைகள் வெளி உலகுக்கு தெரிவதும் இல்லை. தமிழ்ப் பகுதியில் மக்களின் அவலங்கள் வெளியே தெரிவதில்லை.

தமிழ்ப் பகுதியில் மட்டுமல்ல- இலங்கையின் தெற்குப் பகுதியில் ஏதோ, சுதந்திரம் இருப்பது போன்ற தோற்றம் இருக்கிறதே தவிர உண்மையில் அங்கும் சுதந்திரம் இல்லை. கொழும்பில் ஊடக மையங்கள் இயங்குகின்றன. சில ஊடகங்களை அரசே நேரடியாக நடத்துகிறது. பல ஊடகங்களைத் தனியார் நடத்துகின்றனர்.

அவற்றில் சுதந்திரமாக செயற்படும் ஊடகங்களும் அரசை ஆதரித்து செயற்படும் ஊடகங்களும் உண்டு.

### பொருளாதார அதிகாரத்தனத்திலும் ஊடக சுதந்திரம் ஒடுக்கப்படுகிறது

ஆனால், இந்த ஊடகங்களுக்கு முழு உரிமை கிடையாது. கடும் கட்டுப்பாடுகளுடன்தான் அவைகள் செயற்படுகின்றன. அரசு தனது அரசுக்குரிய அதிகாரத்தை மட்டுமல்ல, பொருளாதார அதிகாரத்தையும் பயன்படுத்தி, ஊடக உரிமைகளை ஒடுக்குகிறது.

அரசுக்கு எதிராக செய்தி வெளியிட்டால், அரசு விளம்பரங்களும் அரசு வழங்கும் சலுகைகளும் நிறுத்தப்பட்டு விடுகின்றன.

தனக்குச் சாதகமாக செயற்படும் ஊடகங்களுக்கு அரசு சிறப்பு சலுகைகளை வழங்கிவருகிறது. ஒடுக்குமுறைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசே கட்டவிழ்த்து விட்டுள்ளது.

நேரடியாக சிறிலங்கா அரசாங்கம் நிகழ்த்தும் ஒடுக்குமுறைகளுக்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.

கடந்த ஆண்டு பல ஊடகவியலாளர்களை சிறிலங்கா அரசு கைது செய்தது. கடந்த ஆண்டில் மட்டும் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர்.

"சண்டே லீடர்" என்ற பத்திரிகைக் குழுமத்தின் அலுவலகம் தீ வைத்து நாசமாக்கப்பட்டது. இந்தப் பத்திரிகை அரசை எதிர்த்து வந்ததுதான் காரணம். இந்தப் பத்திரிகை அலுவலகமானது சிறிலங்காவின் வான் படைத்தளத்துக்கு மிக அருகில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அப்படி இருந்தும் அடையாளம் தெரியாத நபர்கள் உள்நுழைந்து தீ வைத்தனர்.

"ஏபிசி" என்ற வானொலி தனது ஒலிபரப்பை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சிறிலங்காவின் தகவல் ஒலிபரப்புத்துறை உத்தரவிட்டது. அந்த வானொலியின் 5 அலைவரிசை ஒலிபரப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட்டன. ஏன்?

அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சொந்த கிராமத்துக்கு அருகே உள்ள ராமினிதன்னா என்னும் கிராமத்தில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்ற செய்தியை ஒலிபரப்பியதற்காக இந்த நடவடிக்கை. இவை நேரடியாக ஒடுக்குமுறைக்கு சில உதாரணங்கள்.

மறைமுகமான அடக்குமுறைகளுக்கும் பல சான்றுகள் உண்டு.

உதாரணமாக - எதிர்க்கட்சிகளின் கருத்துகளையும் வெளியிட்ட "ஜனஹரதா", "ரி.என்.எல்", "ரதுயிரா" உள்ளிட்ட தொலைக்காட்சி ஒளிபரப்புகள் அரசின் பல ஒடுக்குமுறைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பும் "நேரடி விவாதங்கள்" நிகழ்ச்சிகளை, பெருமளவில் மக்கள் பார்க்கிறார்கள். கடந்த ஓராண்டு காலமாக, இந்த விவாதங்களில் பங்கேற்க எதிர்க்கட்சியினரை அழைக்கக்கூடாது என்று சிறிலங்கா அரசாங்கம் மிரட்டி வருகிறது.

கடந்த காலங்களில் புதிய இடது முன்னணி (என்.எஸ்.பி.பி.) கட்சியின் பொதுச்செயலாளருக்கு இந்த விவாதங்களில் பலமுறை பங்கேற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. சிறிலங்கா அரசாங்கம் பற்றிய விமர்சனங்களை அவர் முன்வைத்தார். உண்மைகள் மக்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக, என்.எஸ்.எஸ்.பி க்ட்சிப் பிரதிநிதிகளை அழைக்கக் கூடாது என்று மகிந்த அரசு மிரட்டிவிட்டது.

அதேபோல் இந்த நேரடி விவாதங்களில் பங்கேற்று வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ரவிராஜ், ஐக்கிய தேசியக் கட்சியின் மகேஸ்வரன் போன்றோர் விவாதங்களில் பங்கேற்கக்கூடாது என்பதற்காக மறைமுகத் தடை விதித்தது. அந்தத் தமிழர்களின் பிரதிநிதிகள் அழகாக சிங்கள மொழியில் பேசக்கூடியவர்கள். தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நியாயங்களை சிங்கள மொழியில் அவர்கள் எடுத்து வைத்தார்கள். இந்த நியாயங்களை சிங்களவர்கள் உணர்ந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தில், சிறிலங்கா அரசு அவர்களின் கருத்துரிமையைப் பறித்தது.

அரசை விமர்சிக்கிற திரைப்படங்கள் கூட அடக்குமுறைகளைச் சந்திக்கின்றன. அந்தத் திரைப்படங்களை வெளியிடுவதற்கு திரையரங்கங்கள் மறுக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்களும் சுதந்திரமாக செயற்பட முடியாது. சிறிலங்கா அரசாங்கமானது நேரடியாகவும் மறைமுகமாவும் பல்வேறு சட்டங்களின் வழியாக ஒடுக்கி வருகிறது.

சிறிலங்காவின் சில அமைச்சர்களே, கருத்துரிமைக்கு எதிராக களத்தில் இறங்கி செயற்படுகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதம், சிறிலங்காவின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மேர்வின் சில்வா, அரசாங்கம் நடத்தும் "ரூபவாகினி" தொலைக்காட்சி நிலையத்துக்குள் நுழைந்து, செய்தி ஆசிரியரைத் தாக்கினார். அவரது செய்தியை "ரூபவாகினி" ஒளிபரப்புவதில்லை என்பதே காரணம.

இந்தியா- சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களை எதிர்த்துத் தலையிட்டு கண்டிக்க வேண்டும். மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்ட எங்களுக்காக- சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக -இந்தியா தலையிடவேண்டும்.

எங்களின் நண்பர்களாக - தோழர்களாக இந்தியாவில் இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளும் இடதுசாரி அமைப்புக்களும் தொழிற்சங்கங்களும் ஊடகங்களும் இந்திய அரசுக்கு இதற்கான அழுத்தத்தை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை இந்தியா கண்டிக்க வேண்டும் என்கிறார் ரணத் குமாரசிங்க

இந்தக் கோரிக்கை மிகமிக அவசியமானது. அவசரமானது. காரணம் எங்கள நாட்டில், கருத்துரிமைகளை நேரடியாகவும்- மறைமுகமாகவும் ஒடுக்கி வரும் மகிந்த அரசாங்கத்துக்கு பேராதரவு தந்து வருவது - இந்திய அரசுதான்.

"பயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என்ற முழக்கத்தோடு இந்தியா தனது ஆதரவை சிறிலங்காவுக்கு தந்துவருகிறது.

நான் ஒன்றை இங்கே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிங்கள பௌத்த பிக்குகளின் இனவெறியும் பயங்கரவாதமும்தான் விடுதலைப் புலிகளை ஆயுதம் தூக்கவைத்தது.

அந்த இனவெறி பௌத்த பிக்குகள் மற்றும் சிறிலங்கா அரச பயங்கரவாதத்துக்கான எதிர்வினைதான் விடுதலைப் புலிகள் நடத்தும் யுத்தம்.

எனவே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டும் தனிமைப்படுத்தி பயங்கரவாத முத்திரை குத்தக்கூடாது-

தமிழர்களின் நியாயமான உரிமைகளை சிறிலங்காவின் அரச பயங்கரவாதம் ஒடுக்கியதால் எழுந்த போராட்டம்தான் விடுதலைப் புலிகள் நடத்தும் போராட்டம்.

இடதுசாரிகளும் தொழிற்சங்கங்களும் குறிப்பாக இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சிகள்- சிறிலங்காவின் ஒடுக்குமுறைக்கு எதிராக இந்தியா தலையிட வேண்டும் என்று ஏன வற்புறுத்தாமல் ஒதுங்கி நிற்கிறீர்கள்? கருத்துரிமைப் பறிப்புகளை ஏன் கண்டிக்கத் தயங்குகின்றீர்கள்? என்று அவர் தமது உரையின் இறுதியில் கேட்டார். *

## பிரதேச குழுக்களின் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஜன.28

தென்மராட்சி பிரதேச குழுக்களின் கூட்டம் நாளை பிரதேச செயலகத்தின் மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காலை 9.30 மணிக்கும் பிரதேச விவசாயக்குழுக்கூட்டம் பகல் 11 மணிக்கும்,பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நண்பகல் 12 மணிக்கும் நடைபெறுமென பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (1-2007)


**ஒத்துமாறல்**

**திருகோணமலை கல்விவலயப் பாடசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணப் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார்.**

**தொடர்பு: உதயன் C/O வி.இ.3054. யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்கள்

### *திருமதி சின்னத்துரை பொன்னம்மா*



நாவாலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை பொன்னம்மா அவர்கள் (26.01.2008) சனிக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் திரு திருமதி கணபதி அவர்களின் அன்புமிகு மகளும் அமரர் குழந்தை சின்னத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், சந்திரலிங்கம், தியாகலிங்கம், விமலாதேவி, யோகலிங்கம், சாரதாதேவி, கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயும், திருமதி சரஸ்வதி, திருமதி புவனேஸ்வரி, ஜோர்ஜ்கிங், திருமதி ஜெயந்தி, முருகமூர்த்தி, திருமதி சசிகலா ஆகியோரின் மாமியாரும் சிறிகாந், நரேந்திரபிரசாத், சாருஜன், வியாசன், சஜித்தனா, திலக்ஷன், துவில்சன், ருவில்சன், ஜெசானா, சனுசியன், ரகினாஷ், இஷானிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் அவரது இல்லத்தில் நாளை (30.01.2008) புதன் கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11 மணிக்குத் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நவாலி வடக்கு,* சி.தியாகலிங்கம் *(அரியம்),*
*மானிப்பாய்.* (70598) சி.யோகலிங்கம் *(ஜெயம்).*

### சிவலிங்கம் பரிமளம்

யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவலிங்கம் பரிமளம் (25.01.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - அன்னம்மா (திருநெல்வேலி) தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரெத்தினம் (வைத்தியர்) மற்றும் கனரெத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், நவாலி), நாகரெத்தினம் செல்லம்மா (பூமணி - ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும் சிவராஜி (ஜேர்மனி), ஜெயராஜி, விக்னேஸ்வரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயும் மகேந்திராஜன் (ஜேர்மனி), ஜெய்சங்கர், லோகேஸ்வரி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜேர்மனியில் வசிக்கும் நிஷா, சுதர்சனன், யக்ஷன் மற்றும் தர்ஷன், சேகர், மயூதா, சாயிஈசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கிளிநொச்சியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*65/3 (71/16), அரசடி வீதி,* சகோதரிகள்,
*யாழ்ப்பாணம்.* (70597) பெறாமக்கள்.


**சுடர் ஒளி** THE SUDAR OLI

ஜன. 20 - 26 2008

பல அரசியல் கட்டுரைகளுடனும் வழமையான சுவையான அம்சங்களுடனும் இன்று விற்பனையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்களான
திருமதி இ.துரைசிங்கம் அவர்களின் அன்புத் தாயும்
திருமதி சு.சூரியராசா அவர்களின் அன்பு மாமியாரும்
எமதுபாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியருமாகிய

**நாகமனோன்மணி நடராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை. அதிபர், ஆசிரியர், ஊழியர், மாணவர்.

(70596)

# யுத்தக் குற்றச்சாட்டுகளும் கருணா மீது சுமத்தப்படும்?

லண்டன்,ஜன.29

பிரிட்டனில் ஒன்பது மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கருணாவிற்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

லண்டன் தலைநகரப் பொலிஸாரும், மனித உரிமை அமைப்புகளும் கருணா தொடர்பில் முன்வைத்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில் இவ்விடயம் குறித்துத் தாங்கள் ஆராய்ந்து வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த விசாரணைகளை எதிர்காலத்தில் லண்டன் பொலிஸாரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரும் மேற்கொள்ளக்கூடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவை லண்டன் நகரப் பொலிஸிடம் இவ்விடயம் தொடர்பாகப் சமர்ப்பித்த அறிக்கைகள் கிடைத்துள்ளன எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பல அமைப்புகள் ஒன்றாக ஒருங்கிணைந்து தங்களிடம் உள்ள சான்றுகளின் அடிப்படையில் கருணாவிற்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்துவது குறித்து ஆராய்ந்து வருகின்றன என லண்டன் தலைநகரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருணா இலங்கையில் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களுக்காக அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்துமாறு அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென சித்திரவதைகளிலிருந்து தப்பியவர்களுக்கு ஆதரவளிக்கும் 'ரெட்டி ரெஸ் டிரஸ்ட்' எனும் அமைப்பின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, கருணா மீதான மனித உரிமைக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான அவகாசத்தை இது வழங்கும் எனத் தெரிவித்துள்ளது.

**எதிர்க்கட்சி பிரிட்டனிடம் கேட்டறியும்**

இதேவேளை, பிரிட்டனிற்குள் நுழைவதற்கு கருணாவிற்கு இலங்கை அரசு இராஜதந்திரக் கடவுச்சீட்டு வழங்கிய விவகாரம் தொடர்பாக பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் இலங்கை எதிர்க்கட்சி வட்டாரங்கள் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் கடவுச்சீட்டு வழங்கல் மற்றும் லண்டனுக்குள் சட்டவிரோதமாகக் கருணாவைக் கடத்தியமை போன்றவற்றுடன் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளருக்கு உள்ள தொடர்பு குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா என லண்டன் அதிகாரிகளிடம் வினவுவதற்கு இலங்கை எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

மேலும் இவ்வாறான குற்றச் செயலுக்கு உதவியவர் எனக் கூறப்படும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்கப் பிரஜை என்பதால் அத்தகைய செயலில் ஈடுபட்ட அமெரிக்கப் பிரஜை ஒருவருக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென வினவும் கடிதமொன்றை அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பணியகத்திற்கு அனுப்புவதற்கும் இலங்கை எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, கருணா இலங்கைக்கு நாடு கடத்தப்படுவாரா என்பது குறித்த சர்ச்சையும் உருவாகியுள்ளது.

இலங்கை அரசு இவ்வாறான வேண்டுகோளை விடுத்துள்ளதா என்பதை உறுதி செய்ய மறுத்துள்ள அதிகாரிகள், எனினும் இவ்வாறான வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அது குறித்து கவனமாகப் பரிசீலிக்க வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, அவ்வாறான நாடுகடத்தலுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

யுத்தக் குற்றங்களுக்காக அவரை முழுமையாக விசாரிக்காமல் மீண்டும் சொந்த நாட்டுக்கு நாடு கடத்துவது மிகப் பெரும் தவறு என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (உ)

## அபிவிருத்தி உதவியாளருக்கு தடை தாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 29

தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் நியமனம் பெற்று யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உதவியாளர்களுக்கான வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சை யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை நடைபெறவுள்ளது என இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார் என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார். (203)

# ஊடகங்களுக்கு எதிரான சட்டம் கொண்டுவர முயல்கின்றது அரசு!

**எச்சரிக்கின்றது ஐ.தே.கட்சி**

கொழும்பு, ஜன. 29

ஊடக சுதந்திரத்தை அடக்கி ஒடுக்கும் வகையில் ஊடகங்களுக்கு எதிராக 'குற்றவியல் அவதூறுச் சட்டத்தை' மீண்டும் கொண்டுவர அரசு தீவிரமாக முயற்சிசெய்து வருகின்றது என்று ஐ.தே.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ரூபவாஹினி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் லால் ஹேமந்த மாவலஹே தாக்கப்பட்ட சம்பவத்தையும் அக்கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஜயலத் ஜயவர்தன எம்.பி. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டார். அவர் கூறியவை வருமாறு:-

ஊடகங்களை அடக்கி ஒடுக்கும் முயற்சியில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. ரூபவாஹினிக்குள் புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்ட அமைச்சர் மேர்வின் சில்வா தொடர்ந்தும் அந்நிறுவன ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளார்.

அவருடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவினர் ரூபவாஹினியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் லால் ஹேமந்த மாவலஹேயைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முற்பட்டுள்ளனர்.

அவர் இப்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் உயிருக்காகப் போராடுகின்றார்.

இந்தச் சம்பவத்தை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசு பக்கசார்பின்றி இது தொடர்பாக விசாரணை நடத்தவேண்டும்.

அவரைக் கொலைசெய்யப் போகிறார்கள் எனத் தொலைபேசி வாயிலாகப் பல தடவைகள் மிரட்டியிருக்கின்றனர். இது தொடர்பாக அவர் பொலிஸில் முறைப்பாடும் செய்திருக்கின்றார். ஆனாலும், அவரது பாதுகாப்பு தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அது மாத்திரமின்றி ஊடகங்களை அடக்கி ஒடுக்கும்வகையில் குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசின் இந்தத் திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கொஞ்சமாவது வெட்கமில்லாது கோத்தபாய இதனைக் கூறியுள்ளார். இதை நினைத்து நாம் மிகவும் வெட்கப்படுகின்றோம்; கவலைப்படுகின்றோம். அரசு அத்தகைய திட்டத்தைக் கைவிட வேண்டும்.

இந்தத் தவறான சட்டத்தை எமது ஐ.தே.கட்சி அரசே, அதன் ஆட்சிக் காலத்தில் நீக்கி, நீதி செய்தது. அந்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவர முயல்கின்றது இந்த அரசு. - என்றும் அவர் கூறினார். (சி)

# பெண் உட்பட இரு இலங்கையருக்கு சவூதி அரேபியாவில் மரண தண்டனை

## மற்றும் ஐவருக்கு 5 ஆண்டுச் சிறை

கொழும்பு, ஜன.29

சவூதி அரேபியாவில் கொலை மற்றும் கொள்ளைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட இலங்கையர் ஏழு பேரில் பெண் ஒருவருக்கும் மற்றொருவருக்கும் மரண தண்டனையும் மற்றும் ஐவருக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனையும் வழங்கி அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இவர்களுக்கு எதிராக 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த 20ஆம் திகதி மேற்படி தீர்ப்பை வழங்கியது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கையர் சார்பாக மேன்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்யத் தாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (சி)

## மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா ஆலய 75ஆவது ஆண்டு நிறைவும் திருவிழாவும்

மட்டுவில் வடக்கு லூர்த்து மாதா தேவலாயத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தத் திருவிழாவும் எதிர்வரும 4ஆம் திகதி நடைபெறவுள்ளன. தேவாலயத்தின் கொடியேற்ற நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஐந்து தினங்கள் நடைபெறும் வழிவாடுகளைத் தொடர்ந்து 4ஆம் திகதி ஆலயப் பங்குத்தந்தை ஜூட் அமலதாஸ் தலைமையில் திருப்பலிப் பூசையும் 75ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வும் இடம்பெறும். லூர்த்து மாதா தேவாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வையொட்டி ஆலய வளாகத்தில் மணிக் கோபுரம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இந்த மணிக் கோபுரம் வைத்திய கலாநிதி பே.பிலிப்ஸ் ஞாப கார்த்தமாக அன்னாரது குடும்பத்தினரின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

(203-131)

## நாயுடன் மோதிய ஓட்டோ தடம் புரண்டதில் பயணி காயம்

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோதிய ஓட்டோ தடம் புரண்டதில் அதில் பயணித்தவர் படுகாயமடைந்தார். இச் சம்பவம் நேற்றுக் காலை 5.30 மணிக்கு மீசாலையில் இடம்பெற்றது. கொழும்புக்குச் செல்வதற்கு ஓட்டோவில் சென்ற வேளையில் விபத்து இடம்பெற்றுள்ளது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த கந்தையா இராமநாதன் (வயது 64) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (203-207)

# உயர்தரப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவன் கௌரவிப்பு

பருத்தித்துறை, ஜன. 29

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி கணிதப் பிரிவில் 3 ஏ தரச் சித்திகளையும் பெற்று அகில இலங்கை ரீதியில் 3 ஆம் இடத்தையும், யாழ்.மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்றுச் சாதனை நிலைநாட்டிய செல்வன் வி.ரஜீவனை மக்கள் வங்கி தலைமையகம் கொழும்பில் பாராட்டிக் கௌரவிக்கவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காகச் சாதனையாளர் ரஜீவனும் பெற்றோர்களும் ஹாட்லிக் கல்லூரி அதிபரும் மக்கள் வங்கியின் தலைமையகத்தால் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர் மக்கள் வங்கியில் ''சிசு உதான'' கணக்கு வைத்திருப்பதனால் இவருக்கு மக்கள் வங்கியால் வழங்கப்படும் பரிசுப் பணத் தொகை இரட்டிப்பாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இம் மாணவன் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளதாகவும் மக்கள் வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

(203-218)

## தாதி நேர்முகத் தேர்வில் தோற்றத் தவறியவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்.தாதியக் கல்லூரியில் கடந்த 19 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் தோற்றத் தவறிய விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தாதியக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (203)




காரைநகரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆயுள்வேத மத்திய மருந்தகத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

மருந்தக பெயர்ப் பலகையை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் திரைநீக்கம் செய்து வைப்பதை முதலாவது படத்திலும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மருந்தகத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும், வைத்திய அதிகாரி கிளமென்றீனா சிறில் வைத்திய பரிசோதனையை ஆரம்பித்து வைப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (2309)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 73 பேர் தெரிவு

## உரியவர்களை செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.29

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2008ஆம் ஆண்டு புதிய கல்வி ஆண்டிற்கு யாழ்.மாவட்டத்தில் இருந்து 73 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் இரண்டாம் திகதி பயணிக்கக்கூடியவாறு யாழ். செயலகத்தால் பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கவுள்ளன.

அத்துடன் இவர்களுக்கான பயண அனுமதியை இராணுத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் உரிய மாணவர்களை யாழ்.செயலகப் புனர்வாழ்வுக் கிளையுடன் தொடர்புகொள்ளுமாறும் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**விஞ்ஞானம்**

கே.அபிலாஷினி (கரவெட்டி), எஸ்.தாரணி (கோண்டாவில் கிழக்கு), எம்.ஹேமப்பிரியா (மானிப்பாய்), எம்.கவிதா (யாழ்ப்பாணம்), என்.நவரத்தினம் (வரணி), என். சரவணபவன் (கொக்குவில்), ரி.பிரசாத் (அச்சுவேலி), எஸ்.வருணியா (யாழ்ப்பாணம்).

**கணிதம்**

எஸ்.நடராசா (பருத்தித்துறை), எம்.சோமசுந்தரம் (கோப்பாய்), பி.செல்வம் (கரவெட்டி), எஸ்.தர்சன் (இணுவில்), ஆர்.குழந்தைராம் (கரவெட்டி), எஸ்.நிருபன் (சாவகச்சேரி), பி.கார்த்திகா (உடுவில்), எஸ்.நளினமுரத் (இளவாலை), ரி.பொன்துரை (இளவாலை), வி.சோபனா (புங்குடுதீவு), வை.மதுரா (கந்தர்மடம்), ஆர்.காந்தியா (ஏழாலை), பி.எஸ்.இந்துஜா (ஆனைக்கோட்டை), எஸ்.லோகேஸ்வரன் (கொக்குவில்), ரி.கௌசிகா (உரும்பிராய்), ஏ.கிரிஜா (தெல்லிப்பழை), கே.சயந்தன் (வவுனியா),

**உணவுத் தொழில்நுட்பம்**

கே.கோகிலா (அச்சுவேலி), எஸ்.பாமதி (புலோலி), ஏ.றோமியா (மானிப்பாய்), ரி.தர்ஷனி (கல்வியங்காடு), எஸ்.விக்னேஸ்வரன் (சண்டிலிப்பாய்), கே.பிரகாஜினி (சண்டிலிப்பாய்).

**விவசாயம்**

பி.விஜிதரன் (கோப்பாய்), ரி.குணசீலி (நீர்வேலி), என்.ஸ்ரீபகவான் (புத்தூர்), ஏ.பகீரதன் (புத்தூர்), எஸ்.சுதாகரன் (கோப்பாய்), ரி.திவாகரன் (புத்தூர்).

**இந்துசமயம்**

ஆர்.றஞ்சிதா (சாவகச்சேரி), ஏ.திஷானி (ஏழாலை), ஏ.காயத்திரி (காரைநகர்), கே.மோகனரூபி (தெல்லிப்பழை), ஐ.கிருபாகரன் (தெல்லிப்பழை).

**கிறிஸ்தவம்**

ஜே.அகஸ்ரினா (நெடுந்தீவு), எஸ்.மைதிலி (பண்டத்தரிப்பு), ஜி.மனோகுமார் (யாழ்ப்பாணம்), ஏ.ஆர்.மார்பெல் (யாழ்ப்பாணம்).

**தகவல் தொழில்நுட்பம்**

பி.நவரட்ணம் (நல்லூர்), வி.சுதர்சன் (பருத்தித்துறை), ரி.மதீபன் (கோண்டாவில்), ரி.துளசிக்கா (மிருசுவில்), எஸ்.கிரிஷாந்தன் (அல்வாய்), கே.கௌசிகன் (புலோலி), வி.தர்ஷிநாத் (யாழ்ப்பாணம்);

**உடற்கல்வி**

ஆர்.அனீதன் (கரணவாய்), ஆர்.ஸ்ரீகரன் (பருத்தித்துறை), ஐ.சாமினி (தெல்லிப்பழை), எம்.சாருஹாசன் (ஊர்காவற்றுறை), எஸ்.எஸ்.பிரதீபா (மானிப்பாய்), ஆர்.இராஜேந்திரன் (மிருசுவில்), வி.மயூரி (கொடிகாமம்), கே.சுரேந்திரன் (சுன்னாகம்), ஜே.புஸ்பராஜா (கரவெட்டி), பி.கார்த்திகா (யாழ்ப்பாணம்).

**ஆரம்பக்கல்வி**

ஆர்.ஜெயப்பிரியா (உடுவில்), ஆர்.றஜித்தா (சுன்னாகம்), பி.பிரதீபா (கோண்டாவில்), ஆர்.தர்சினி (கரவெட்டி), எஸ். சிவதரணி (கோண்டாவில்), வி.சிவசங்கரி (திருநெல்வேலி கிழக்கு), சி.எஸ்.பிள்ளை (மானிப்பாய்), எஸ்.ரேணுகா (கொடிகாமம்), என்.கயல்நிஷா (மல்லாகம்), ஐ.கிருபாகரன் (தெல்லிப்பழை). (203)

## உயர்தொழில் நுட்பவியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.29

கடந்த நவம்பர் மாதம் உயர் தொழில் நுட்பவியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நடந்த பட்டமளிப்பு விழாவில் பங்கு பற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளன.

தலைமை அலுவலகத்தில் வழங்கப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்து உரிய சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு உயர் தொழில்நுட்பவியல் நிறுவன இயக்குநர் ஆர்.ஏ. திலகரட்ணம் தெரிவித்துள்ளார். (203)

## தடகளப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் நாளை

வலி.வடக்கு,ஜன.29

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இந்த ஆண்டுக்கான தடகள விளையாட்டுப் போட்டியை நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தெல்லிப் பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் சு.முரளீதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி விளையாட்டு அலுவலர் கே.முகுந்தன் கேட்டுள்ளார். (203-86)

## மென்பந்து கிரிக்கெட் ஆட்டம்; சச்சின் வி.க. சம்பியனானது



சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட சச்சின் விளையாட்டுக் கழக வீரர்களை படத்தில் காணலாம். படம்: நேசன்

வலி.வடக்கு,ஜன.29

மல்லாகம் கோட்டைக் காடு ஸ்ரீமுருகன் கழகத்தினால் அமரர் து.பிரதீஸின் 10ஆவது ஆண்டு நினைவையொட்டி நடத்தப்பட்ட 12 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சச்சின் விளையாட் டுக் கழகம் சம்பியனானது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதா னத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சச்சின் விளையாட்டுக் கழகமும், இளைஞர் ஒன்றியமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய இளைஞர் ஒன்றியம் 11.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 56 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

இளைஞர் ஒன்றியத்தில் சார்பில் துடுப்பெடுத்தாடிய சதீஸ், விமல் ஆகியோர் முறையே 13, 12 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

சச்சின் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் பந்து வீசிய பிரசாந் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சதீஸ் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தடுப்பெடுத்தாடிய சச்சின் விளையாட்டுக்கழகம் 9.5 ஓவர்களைப் பெற்று வெற்றிபெற்றது.

சச்சின் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் துடுப்பெடுத்தாடிய சுந்தர், சதீஸ் ஆகியோர் தலா 20, 14 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இளைஞர் கழகத்தின் சார்பில் பந்து வீசிய பரனீஸ்கரன் 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

சச்சின் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரசாந்தன் சிறந்த பந்து வீச்சாளராகவும் சுந்தர் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (1-86)


சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்

**ஒரு வருடப் பயிற்சி முகாம்**



சுவாமி விவேகானந்தரின் 146ஆவது ஜன்ம தினத்தை முன்னிட்டு ஸ்ரீராமகிருஷ்ண சாரதா தேவாச்சிரமம்,சித்திரை 1 ஞாயிற்றுக்கிழமை தமிழ் இந்துப் புத்தாண்டு தினத்தன்று "சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்" பற்றிய ஒரு வருடப் பயிற்சி முகாமை ஆரம்பிக்கவுள்ளது. முக்கிய அம்சங்களைக் கொண்ட விவரக்கொத்து 01.03.2008 அன்று வெளிவரும். பயிற்சி முகாமில் பங்குபற்ற உள்ள ஆர்வலர்கள் ரூபா 50/= இற்கு உரிய முத்திரைகளை அனுப்பி விவரக்கொத்தை பெற்றுக்கொள்ளலாம்.

வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை நடைபெறும்.

சுவாமி விவேகானந்தரின் அபிலாஷைகள், 'ஆத்மீகப் பணியும் செயல்திட்டமுமாக' உள்ளன.

*சுவாமிஜி ஓர் உன்னத செயல் வீரன்.*

செயலாளர்,
ஸ்ரீசாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி/551256)



**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை
**செல்வி சூரியவதனி அரசரட்ணம்**
அவர்களது பெரியதாய்
**திருமதி ப.சிவலிங்கம்**

அவர்கள் இறைபதம் எய்தியமையை அறிந்து, துயருறும் குடும்பத்தினருடன் துயர் பகிர்வதோடு கண்ணீரால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

(70592)



**துயர் பகிர்கின்றோம்**

27.01.2008 ஞாயிற்றுக்கிழமை காலமான
எமது சங்க அங்கத்தவர்
**திருமதி சின்னத்துரை செல்லம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நீர்வைக் கந்தப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! சாந்தி!

*பிரிவால் துயருறும்:*
நீர்வேலி ஸ்ரீமுருகன் மாதர் சங்க சமூகத்தினர்.

கந்தசுவாமி கோயிலடி,
நீர்வேலி தெற்கு.

(70577)



**Obituary Notice**



**Mr.A.Jayaweerasingam**

(Retired Executive Engineer, RDA)

The funeral service will be held on Tuesday 29th January at 2.30 p.m. in Leighmoor Uniting Church 185, Wickham Road, Moorabbin, Melbourne and Cremation at the Boyd Chapel at 4 p.m.

**அமரர் ஜெயவீரசிங்கம்** அவர்களது இறுதி வழிபாடு ஆஸ்திரேலியா நாட்டில் நடைபெறும்வேளை அன்னாரது வாழ்வுக்கும் பணிக்கும் ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (29.01.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டிக்குளி, பரி. யோவான் ஆலயத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சபையோர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs.Priyanthi Joe,
The Rev.Dev.Anadarajan.

(சி/551254)



**மரண அறிவித்தல்**

**நாகலிங்கம் சுப்பிரமணியம்** (பாலி)



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் 28.01.2008 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் லக்ஜனி, அதீசன், பவதீசன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசாமி, அன்னம்மா மற்றும் சிங்கராசா, சிவலிங்கராசா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற இலங்காதேவி மற்றும் புஸ்பராணி, சரோஜினிதேவி, மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரியமலர், அப்பாபிள்ளை, அரியசோதி, அரியசுஜி, அசோக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுப்பிரமணியம் நாகேஸ்வரி,**
கைதடி தெற்கு, கைதடி.

தகவல்: குடும்பத்தினர்

(70589)



வெளிவந்துவிட்டது
2007ஆம் ஆண்டு முதல்
புதிய பாடத்திட்டம்
தரம் 1

**கற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

வெளியீடு:
ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை,
235, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P.: 9481



**போட்டோப் பிரதி இயந்திரம் விற்பனைக்கு**

மிகவும் நல்ல நிலையிலுள்ள Sharp AR-206 டிஜிற்றல் போட்டோப் பிரதி இயந்திரம் விற்பனைக்குண்டு. (கணனியுடன் இணைக்கலாம்).

தொடர்பு: 222, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.



**மரண அறிவித்தல்**

**சுப்பையா சுந்தரலிங்கம்**

(சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை நிரந்தர வாழ்விடமாகவும், பெரிய பிரித்தானியாவை தற்காலிக வாழ்விடமாகவும் வரித்துக்கொண்ட சுந்தரலிங்கம் 28 ஆம் திகதி பின் இரவு இலண்டனில் காலமானார். இவர் அமரர் சிதம்பரநாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கலாநிதி சுரேந்திரன் (இலண்டன்), சுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயலக்சுமியின் அருமைச் சகோதரரும் சிவலி . தனபாலசிங்கம் (அதிபர், உயரப்புயம் குணபால வித்தியாசாலை) ஆகியோரின் மாமனாரும், கெயன், செலினி, கஜனி, கோபிராஜ், உமேஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் அமரர் குமாரலிங்கம் அவர்களின் மைத்துனருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

172/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 060 22149

தகவல்:
என். தனபாலசிங்கம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வடமராட்சி தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய முன்னாள் அதிபர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்தமாக ஞாபகார்த்த நிதியத்தால் சிவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பாடசாலை மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்ற மாணவனுக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா தங்கப் பதக்கம் அணிவிப்பதையும் சித்திபெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம். (203)

## மகாத்மா காந்தியின் 60 ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஜன.29

மகாத்மா காந்தியின் 60 ஆவது நினை வுதின நிகழ்வுகள் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளன. அன்று முற்பகல் 10 மணிக்குப் பருத்தித்துறை பஸ் நிலை யத்தில் உள்ள காந்தி சிலைக்கும் யாழ். நகர்ப் பகுதியில் உள்ள காந்தி சிலைக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

தொடர்ந்து முதலாம் குறுக்குத் தெரு வில் உள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்கப் பணிமனையில் பொதுக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை காந்தி சேவா சங்கத்தினர் மேற்கொண்டுள்ளனர். (203)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## ஞானச்சுடர் 121 ஆவது மலர்

செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளி யிடப்பட்டு வரும் ஞானச்சுடர் 121 ஆவது மலர் வெளியிடப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மலர் வெளியீட்டுரையை ஓய்வு பெற்றமக்கள் வங்கி முகாமையாளர் திருமதி யோகேஸ்வரியும் மதிப்புரையை வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் அ.சிவநாதனும் நிகழ்த்தினர்.

## நகரசபை அலுவலகம் இடமாற்றம்

பருத்தித்துறை, கந்தவுடையார் வீதியில் தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த பருத் தித்துறை நகரசபை அலுவலகம் பருத்தித் துறை அத்தியடிப் பிள்ளையார் ஆலய முன்றி லுள்ள தனியார் கட்டடத்திற்கு இடமாற் றம் செய்யப்பட்டுள்ளதாக நகரசபை செயலா ளர் ஏ.நடராஜா அறிவித்துள்ளார். (203-218)

# குடாநாட்டிலுள்ள வயல் நிலங்களில் காலபோக அறுவடை பெரும் விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் திருப்தி

யாழ்ப்பாணம், ஜன.29

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களி லும் உள்ள வயல்களில் தற்போது காலபோக நெல் அறுவடை இடம்பெற்று வருகின்றது.

இம்முறை பெருமளவான விளைச்சல் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் திருப்தி யும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளனர்.

வலி.தென்மேற்கு மற்றும் வலி.மேற்கு பிரதேசங்களில் பாரம்பரிய விதை நெல் இனங்களான மொட்டைக்கறுப்பன், பெரிய வெள்ளை ஏச்-4 போன்ற, நெற் பயிர்கள் விளைந்து தற்போது அறுவடைக்குத் தயா ரான நிலையில் உள்ளன.

குறுகிய கால விளைச்சலைக் கொண்ட நெல்லைப் பயிரிட்டவர்கள் ஏற்கனவே அறுவடையை ஆரம்பித்துவிட்டனர்.

கடந்த வருடங்களிலும் பார்க்க இம் முறை மேற்படி பிரதேசங்களில் அதிக பரப் பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட் டிருந்தது.

அரிசிக்கு ஏற்பட்ட அதிக விலை யுயர்வு மற்றும் தட்டுப்பாட்டின் காரண மாக இம்முறை அதிக விவசாயிகள் ஊக்கமெடுத்து- தரிசு நிலங்களைக் கூட விட்டு வைக்காது பண்படுத்தி - பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை-

மழை போதுமானதாகப் பெய்ததாலும் உரிய காலத்தில் உரம், கிரமிநாசனி என்பன இங்கு கொண்டுவந்து விநியோகிக்கப் பட்டதாலும் விவசாயிகளின் பெருமுயற்சி மற்றும் ஊக்கத்தினாலும் இப்பிரதேசத் தில் நெல் விளைச்சல் இம்முறை அதிகரித் துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

தென்மராட்சிப் பகுதிகளிலும் அறுவடை இடம்பெறுகின்றது.

தென்மராட்சியில் நெற் செய்கை பண்ண முடியாத இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் விவசாயிகளால் நெல் தாரா ளமாக பயிரிடப்பட்டன. இவ்வருடம் மட்டுவில், சரசாலை, வரணி, நுணாவில், தனங்களப்பு உள்ளிட்ட பல இடங்களில் செய்கை பண்ணப்பட்டன.

விவசாயிகளுக்கு கமநல சேவை நிலை யங்களினூடாகத் தாராளமாக விதை நெல், மானிய உரம் என்பன வழங்கப்பட்டன. இதனால் இவ்வருடம் அதி உச்ச விளைச் சலை விவசாயிகள் பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (203-135-131)

# திக்கத்தில் 'போரூட்'டால் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டது

வடமராட்சி,ஜன.29

'போரூட்' நிறுவனத்தின் நிதி உதவியு டன் திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் ... இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் பட்ட திக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நிலையத் தலைவர் வ.திருக்குமாரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப் பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் நிலை யத்தை நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் சக்கோட்டை பங்குத் தந்தை அருட்திரு மருத்தீன் பத்திநாதர் அடிகளார், துளாய் பிள்ளையார் ஆலய குரு சிவஸ்ரீ சிவபாதக் குருக்கள் ஆகியோரது ஆசியுரையைத் தொடர்ந்து மக்கள் வங்கி யின் ஓய்வுபெற்ற முகாமையாளர் திருமதி சிவமணி கணேசலிங்கன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ ஆகி யோர் வாழ்த்துரை வழங்கினர்.

தொடர்ந்து போரூட் நிறுவனத்தின் மனிதாபிமானப் பணிகளுக்கான திட்ட முகாமையாளர் பி.ரூபேந்திரன், வடம ராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ் வரன், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பருத் தித்துறை ஆதார வைத்தியசாலை பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வ.ஜெயராஜா, பருத்தித்துறை பதில் சுகா தார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். பிரேம் ஆனந்த், யாழ்.போதனா வைத்தி யசாலை வைத்திய நிபுணர் டாக்டர் இளங்கோ ஞானியார் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

நிகழ்வின் முன்னதாக துளாய் பிள் ளையார் ஆலயத்தில் விசேட பூசைகள், வழிபாடுகள் நடத்தப்பட்டு விருந்தினர் கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். (203-160)

# சங்கானை மக்கள் வங்கிக்கிளை கணனி மயப்படுத்தப்படவுள்ளது

### வடபிராந்திய உதவிபொதுமுகாமையாளர் தகவல்

சங்கானை,ஜன.29

சங்கானை மக்கள் வங்கிக் கிளை கணனி மயப்படுத்தப்படவுள்ளதாக மக்கள் வங் கியின் வடபிராந்திய உதவிப்பொது முகாமை யாளர் ரி.கே.ஆனந்தராசா அறிவித்துள்ளார்.

வங்கியின் புதிய கட்டடத்தை அண் மையில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இத்தகவலைத் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சங்கானை மக்கள் வங்கிக்கிளை யாழ். மாவட்டத்திலேயே அதிகமான வாடிக்கை யாளர்களைக் கொண்ட வங்கியாகும்.

இதற்கொன கடந்த வருடம் மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம் பிள்ளை கொழும்பில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் விருதினைப் பெற் றுக் கொண்டார். இந்நிலையில் மக்களில் சேவைகளை இலகுபடுத்தும் நோக்குடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இனிவரும் காலங்களில் வாடிக்கை யாளர்களுக்கான நற்சேவையை இந்த வங்கி மூலம் மேலும் வழங்க முடியும் - என்றார். (203-29)

# பொது அறிவு, நுண்ணறிவுத் தேடல் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஜன.29

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத் தால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவு, நுண்ணறிவுத் தேடல் பரீட் சையில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

போட்டியில் முதல் 10 இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

வி.வாகீசன் (தரம்7 - யாழ்.இந்துக் கல் லூரி),சி.ஜோஜினி (தரம்13 -மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), ச. முத்துக்குமரன் (தரம் 7 யாழ். மத்திய கல்லூரி), அ.மேரி அனிற்றா (தரம் 9 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வெ.மேரிசெறின் (தரம் 8 - திருக்குடும்ப கன்னியர்மடம்).

பே.ராகுல் (தரம் 8 - சென்.ஜேம்ஸ் கல்லூரி), ஜெ.அபர்ணா (தரம் 13 வேம்படி மகளிர் கல்லூரி), டொ.ஜோன் சிகா (தரம் 8 - திருக்குடும்ப கன்னியர் மடம்), ம.திவ்வியா (தரம் 10 - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), க.துளசி (தரம் 8 - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி).

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி சிவகுருநாதர் வீதியில் அமைந்துள்ள றோட்டறி நிலையத்தில் இடம்பெற வுள்ளது என்று அதன் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார். (203)



தென்மராட்சி அறவழிப் போராட்டக் குழுவினரும் கனேடிய உலக பல்கலைக் கழக சேவையினரும் இணைந்து நடத் திய தொழிற்பயிற்சிக் கண்காட்சி மண்டபத்தை யாழ்.அரச அதிபர் நாடா வெட்டித் திறந்து வைத்தபோது எடுக் கப்பட்ட படம். (131)

# சுனாமி பாதித்தவர்களின் வீடுகள் முழுமையாகாமைக்கு மூலப் பொருள் தட்டுப்பாடே காரணம்

### பருத்தித்துறை பிரதேச செயலர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.29

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகள் முழுமையாக்கப்படாமைக்கு மூலப் பொருள் தட்டுப்பாடும் அவற்றைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களுமே கார ணம் என்று பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரி வித்துள்ளதாவது :

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுட்குட்பட்ட பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 1874 முழுச்சேத வீடுகளில் 290 வீடுகள் உலக வங்கியினால் பூரணப் படுத்தப்பட்டுள்ளன.

ஆயிரத்து 968 பகுதி சேத வீடுகளில் 1936 வீடுகள் புனரமைக்கப்பட்டு பூர்த் தியடைந்துள்ளன.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரி விற்குட்பட்ட பகுதியில் 17 கிராம அலு வலர் பிரிவுகள் சுனாமியால் பாதிப்படைந் துள்ளன.

இவ்வாறு சுனாமியால் அழிவடைந்த வீடுகள் உலக வங்கி, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ஊடாகப் புனர மைக்கப்பட்டு வருகின்றன.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக முழுச்சேத வீடுகள் ஆயிரத்தி 276, பகுதிச் சேதவீடுகள் 57 எனக் கணக் கிடப்பட்டுள்ளது.

இதில் 495 முழுச் சேத வீடுகளும், 51 பகுதிச் சேத வீடுகளும் அரச சார்பற்ற நிறு வனங்களினால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நிக்கொட் நிறுவனத்தினால் 15 வீடு கள் புனரமைக்கப்படுகின்றன.

ஆழிப்பேரலை தாக்கம் ஏற்பட்டு மூன்றாண்டு கழிந்துள்ள போதிலும் நாட் டில் நிலவும் அசாதாரண சூழல், மூலப் பொருள் தட்டுப்பாடு, அவற்றைப் பெறு வதில் ஏற்படும் தாமதங்களே வீடமைப்புத் திட்டம் முழுமை பெறாமைக்குரிய காரணங்கள் ஆகும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (203-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ஆம் ஆண்டு நினைவு தினம்

அன்னை மடியில்
11 ★ 10 ★ 1937



முருகன் அடியில்
12 ★ 02 ★ 2004

### அமரர் தம்பு கணேசபிள்ளை

(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி,
முன்னாள் தலைவர் - கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்)

திதி: அபரபட்ச ஸப்தமி

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (70465)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மண்ணில் மகிழ்வுற
23 ★ 06 ★ 1921



விண்ணில் இடம்பெற
31 ★ 12 ★ 2007

### திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம்

(நடுவில்)

சோலைக் குயிலுந்தன் பார்விட்ட பயணத்தில்
நொருங்கிப் போனதெம் மனது
எம் உணர்வில் பூத்த உதிரக் கொடியே!
எம் மனங்களில் நீ....
உதிராத மலராய் இருக்கிறாய்
உயர்த்தி வைத்த இமயத்தின் பிறப்பே!
உன்னால் நாம் உயர்வுகள் கண்டோம்
எம்முயிர் உள்ளவரை...
உனக்கிங்கு இறப்பென்பதில்லை மனங்களில் நீ வாழுவாய்.

கடந்த 31.12.2007 திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டி மற்றும் சபிண்டிகரணக் கிரியைகள் நாளை (30.01.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அக் கிரியைகளிலும் அதன்பின் இடம்பெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

"திருமகள் வாசா", வட்டுவத்தை,
அலவாய் கிழக்கு, அல்வாய். (70447)

குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் நமசிவாயம் என்பவருடைய மோட்டார் சைக்கிள் இரண்டையும் பதிவு வரிப்பத்திரம் I.P அடையாள அட்டை, தவமணி நமசிவாயம் என்பவரின் தே.அ. அட்டை என்பன நீர்வேலியிலிருந்து ... ஊடாக கல்லாலைக்குப் போகும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 145, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். T.P.: 021 222 3770 தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

இளையதம்பி மெய்யழகன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, வாகன சாரதி அனுமதிப் பத்திரம், வேலைத்தள அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய மணிபேர்ஸ் 20.01.2008 ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 226 3340 என்ற எனது தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். அல்லது மொடேர்ன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடியில் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

''புனிதம்'',
வதிரி, கரவெட்டி.

இ.மெய்யழகன். (70567)

## கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.29

கோப்பாய்க் கோட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு கோட்ட அலுவலகத்தில் நடைபெறும் என கோட்டக்கல்வி அதிகாரி சி.சித்திரவடிவேல் தெரிவித்தார். (202)

## நவாலி மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடம் புனரமைத்துத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.29

நவாலி மகாவித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம் வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா. வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலிகாமம் வலய பொறியியலாளர் கு.சிவபாலன், வலிகாமம் விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.விஜேந்திர சர்மா, சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுகூடம் 30 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (203-95)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜன.29

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக உள்வாங்குதல் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் தவறாது அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (203)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
09★05★1939

இறைவன் அடியில்
02★02★1998

### அமரர் கணபதிப்பிள்ளை ஜெகதீசன்

(அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவரும், கட்டட ஒப்பந்தகாரரும்)

திதி: 29.01.2008

உங்கள் புன்முறுவல் பூத்த முகம் மலர்ந்து
பத்து ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'லிங்கஸ்தான்',
உடுவில் வீதி, மானிப்பாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(70572)

## நான்காம் வருட இதய அஞ்சலி



### அமரர் சின்னத்துரை நல்லையா

(இராசு)

தோற்றம்: 03.03.1947 | மறைவு: 12.02.2004

திதி: 29.01.2008

வேண்டும் போது எம் ஆயர் துடைத்து
வாழ்வில் இன்பம் தந்திடும் பிதாவே!
பூண்ட கருமம் பொறுமையுடன் முடிப்பவரே!
பூவுலகில் புகழ் பூத்த கோமானே!
மாண்டும் புகழ் மங்கா மன்னவனே
மாநிலத்தில் வந்தாலும் நாங்கள்
ஆண்டு பல சென்றாலும் ஐயாவே!
ஆசைமிகு உன் நினைவு மறையாது!

தெடுத்தனை,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(70568)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சின்னக்குட்டி குண்டுமணி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 27 |
| 04 | 01 |
| 1933 | 2000 |

திதி: 29.01.2008

வருடங்கள் நாலிரண்டு ஆனதுதான் ஐயா
விருட்சமாய் எம்முடன் உங்கள் நினைவுகள் ஐயா
வசந்தங்கள் விரிய எங்கள் வாழ்க்கையில் ஐயா
வருத்தங்கள் பலதான் வந்து ஐயா ஆயினும்
நாம் தளரவில்லை மனந்திடம் தான் ஐயா
நித்திய கருமங்கள் கடமைகள் அத்தனையும் ஐயா
நினைவினில் இருந்தி இவ்வுலகில் நாம் தான் ஐயா
நேசமுடன் உங்கள் நினைவுடன் வாழ்வோம் ஐயா.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

கலைமகள் வீதி, இடைக்காடு கிழக்கு, உடுப்பிட்டி. (70571)

குடும்பத்தினர்.

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்

### அமரர் இராசரத்தினம் புஷ்பராசா

(வசந்தன்)



தாயின் மடியில்: 13.04.1978

ஆண்டவன் அடியில்: 09.02.2007

திதி: அபரபக்க ஸப்தமி

எத்தனை ஆண்டுகள் போனாலும் வசந்தன்
நினைவிலே நிஜமாகி நிஜத்திலே நிழலாகி
நித்தமும் உமது முகம் தேடி
நினைவுகளைச் சுமக்கின்றோமே
நிலையாக எம் மனதில் உன் நினைவுகள்
நிஜமாக உன்னோடு வாழ்ந்த நாமங்கள்
நிழலாகிப் போனாலும் ஆறாது எம்மனம்
உமது ஆத்மா சாந்திபெற
உருகியே நாம் வேண்டுகின்றோம்.

...லை வீதி,
சங்கிராமம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (70579)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்,
உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பாதாள உலகக் கும்பல்களுக்கு உயிர், உரமூட்டும் எத்தனங்கள்

பட்டறிவிலிருந்து பாடங்களைப் பழுதறப் படித்துக் கொள்வதில் தென்னிலங்கை தொடர்ந்தும் தவறிழைத்தே வருகின்றது.

தென்னிலங்கையின் மொனறாகலைப் பகுதியில் ஊடுருவியுள்ளனர் என்று கருதப்படும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கு உள்ளூர் கிராமவாசிகளுக்கு ஆயிரக்கணக்கில் துப்பாக்கி போன்ற ஆயுதங்களை வழங்குவதற்கு கொழும்பு அதிகாரவாககம் எடுத்திருக்கும் தீர்மானம், பட்டறிவை சரிவரப் பிரயோகிக்கத் தவறியதால் எழுந்த தப்பு என்றே தோன்றுகின்றது.

வடக்கு - கிழக்குத் தமிழர்களின் இன உரிமைக்கான யுத்தத்தை ஒரு முனையில் எதிர்கொள்ளும் கொழும்பு அரசு, மறுமுனையில் பாதாள உலகம் என்ற மிகப் பயங்கர கொடூர வன்முறைக் கும்பல்களின் அச்சுறுத்தலையும் எதிர்கொண்டு நிற்கின்றது.

நாட்டை இன யுத்தம் ஆட்டிப்படைப்பது போல தென்னிலங்கைச் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் இந்தப் பாதாள உலகக் கும்பலும் ஆட்டிப்படைத்து வருகின்றது என்பது வெள்ளிடை மலையாக, துலாம்பரமான விடயம்.

உண்மையில் இருபத்தியைந்துக்கும் குறையாத ஆயுத இயக்கங்கள் செயற்பட்டு, அவற்றில் இருபதுக்கும குறையாத இயக்கங்கள் திடீரென முடக்கப்பட்ட தமிழர் சமூகத்தில்தான் பாதாள உலகக் கும்பல்களின் அராஜகம் தீவிரமாக வேரூன்றியிருக்க வேண்டும்.

ஆனால், அதற்கு மாறாக, சட்டரீதியான அரச நிர்வாகம் தொடர்ந்து பேணப்பட்ட தென்னிலங்கையிலேயே பாதாள உலகக் கும்பல் வேர்விட்டு ஆழப் பதிந்து, சமூகத்தில் புரையோடித் தனது கோரப் பிடியை வலுவாக்கிக் கொண்டிருக்கின்றது.

அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் நோக்கில் தமது கல்வியை - குடும்ப வாழ்வை - துறந்து, பல்வேறு இயக்கங்களில் இணைந்த ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், அவர்கள் சார்ந்த சுமார் இருபது இயக்கங்கள் வரை திடீரென முடக்கப்பட்டபோது, அந்த இயக்கங்களுக்குரிய ஆயுதங்களுடன் நட்டாற்றில் விடப்பட்டனர். அத்தகைய சூழலில் தனித்தனியாக பல பாதாள உலகக் கும்பல்கள் தமிழர்கள் மத்தியிலிருந்து இலகுவாகத் தோற்றம் பெறக்கூடிய சூழலும், வாய்ப்பும், சந்தாப்பமும் இருந்தன. ஆனால் தெய்வாதீனமாக அப்படி எதும் நேராமல் போயிற்று.

ஆனாலும், தென்னிலங்கையில் இன்று கொடூர அராஜகங்களைப் புரியும் பாதாள உலகக் கும்பல்கள் போல தமிழர்கள் மத்தியில் இன்று கொடூரமும், அராஜகமும், அட்டகாசமும் இழைக்கப்படாமல் இல்லை.

அவற்றுக்கு, சீருடைத்தரப்புகளுக்கு அப்பால் ஒட்டுக் குழுக்களும், துணைப்படைகளுமே பின்னணிச் சூத்திரதாரிகள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இவை தமிழர் மத்தியிலிருந்து தாமாக உருவெடுத்த பாதாள உலகக் கும்பல்கள் அல்ல. தமிழர் தாயகத்தில் சில அழிவு வேலைகளுக்கு எனத் தெற்கால் ஊட்டி வளர்க்கப்பட்ட குழுக்களே அவை.

இதேசமயம், தெற்கில் தனது சட்ட ரீதியான ஆட்சி தொடர்வதாக இலங்கையை நிர்வகித்த கொழும்பு அரசுகள் தொடர்ந்து கூறிவந்தாலும், தூர நோக்கின்றி - தீர்க்கதரிசனமின்றி - அவை மேற்கொண்ட நடவடிக்கைகள் தென்னிலங்கையில் என்றும் அடக்க முடியாத பெரும் பாதாள உலகக் கும்பல்களின் சாம்ராச்சியம் வித்தூன்றி விருட்சமாக விருத்தி காண்பதற்கு வழி செய்துவிட்டன.

தென்னிலங்கையில் எழுந்த ஜே.வி.பியினரின் கிளர்ச்சியை அடக்கவென தெற்கில் அரசியல்வாதிகள் உட்படப் பல தரப்பினருக்கு அரசு 'சப்ளை' செய்த சுமார் பதினையாயிரம் ஆயுதங்களும் -

அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் தமிழர்களை அடக்கவென கண், மண் தெரியாமல் ஆயுதங்களை வாங்கிக் குவித்து, விநியோகித்து, சிங்கள இளைஞர்கள் எல்லோரையும் தாரதம்மியம் பார்க்காமல் படைகளுக்குச் சேர்த்து, அவர்களிடம் ஆயுதங்களைக் கொடுத்து அனுப்பிய நடவடிக்கைகளும் -

எல்லைப்புறச் சிங்கள மக்களுக்குத் தற்பாதுகாப்புக்கு என்ற பெயரில் விநியோகித்த பல்லாயிரம் ஆயுதங்களும் -

ஒன்று சேர்ந்து, தெற்கில் பெரும் பாதாள உலகக் கும்பல் என்ற தனித்தனி இராச்சியங்களை ஸ்தாபித்து, உயிரூட்டி, விஸ்வரூபமாக வளர்த்துவிட்டிருக்கின்றன.

முன்னரே எல்லைப்புறச் சிங்கள மக்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்தமைபோல இப்போது தென்னிலங்கைக் காட்டுப்புறம் வாழ் மக்களுக்கு ஆயுதங்களை வழங்கத் தீர்மானம் எடுத்துத் தன் தலையில் மேலும் மணவாரிப் போடத் தயாராகிறது தென்னிலங்கை.

ஏற்கனவே முப்பத்தியையாயிரத்துக்கும் அதிகமான சட்ட விரோத ஆயுதங்கள் தென்னிலங்கையில் பாதாள உலகக் குழுக்களிடம் உள்ளன என்று கணிப்பிடப்படுகின்றது. அந்தத் தொகையை மேலும் அதிகரித்து, அந்தப் பாதாள உலகை மேலும் விஸ்தரித்துப் பலப்படுத்த தெற்குத் தானாகவே முயலும்போது - தன் தலையில் தானே மண் அள்ளிப் போடும்போது - யார் அதைத் தடுக்க முடியும்?

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி மக்கள் இயக்கமாக அதனை அங்கீகரியுங்கள்

## சென்னை மகாநாட்டில் இந்திய அரசை வற்புறுத்தித் தீர்மானம்

சென்னை, ஜன.29

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் போராடி வருகின்றார்கள். அவர்களை மக்கள் இயக்கமாக இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும். அதேநேரம் அவர்கள் மீதான தடையையும் இந்திய அரசு நீக்கவேண்டும்.



சென்னையில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கருத்துரிமை மீட்பு மாநாட்டில் இவ்வாறு இந்திய மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மொழிப்போர் மாவீரர்கள் நினைவு நாளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் கருத்துரிமை மீட்பு மாநாடு சென்னை அமைந்தகரையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாநாட்டிற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தலைமை தாங்கினார்.

### வீரவணக்கம்

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:

விடுதலைப் புலிகளின் தூதுவராக இருந்த பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனை சிறிலங்கா இராணுவம் படுகொலை செய்தது. அவருக்கும் அவருடன் வீரமரணம் அடைந்த அனைவருக்கும் இந்த மாநாடு வீரவணக்கம் செலுத் துகின்றது.

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் உரையின்போது, தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்ததற்கும், அருந்ததியர் சமூகத்திற்கு உள் ஒதுக்கீடு வழங்கியதற்கும் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### கருணாநிதிக்கு நன்றி

தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கு மதிப்பெண் வரையறை ஏதுமின்றி இதுவரை கல்வி உதவித் தொகை வழங்கப்பட் டது. தற்போது பள்ளி இறுதி வகுப்பில் 60 சதவீதம் மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்கப்பட உள்ளதாகத் தெரிகின்றது. இது தாழ்த்தப்பட்ட பழங் குடியினர் மேம்பாட்டுக்கு எதிரான செயல் ஆகும். இது குறித்து முதலமைச்சர் கருணாநிதியிடம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் கூறப்பட்டது. அவர் மத்திய சமூக நீதித்துறைக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதற்காக முதலமைச்சர் கருணாநிதிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வித்துறை அதிகாரங்களைப் பொதுப் பட்டியலில் இருந்து விலக்கி, மாநிலப் பட்டியலில் இணைக்க வேண்டும் என இந்திய அரசை விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக்கொள்கின்றது.

செம்மொழியான தமிழ்மொழியை இந்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக நடைமுறைப்படுத்த விரைவில் அறிவிக்க வேண்டும் என்று இந்திய அரசை இந்த மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

### தமிழை மீனவரை இந்தியா பாதுகாக்க வேண்டும்

தமிழை நீதிமன்ற வழக்கு மொழியாக நடைமுறைப்படுத்தத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்திக் கொன்று வருகின்றது. இதை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்திய ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழக மீனவர்களைப் படுகொலை செய்வதன்மூலம் இந்தியாவின் இறையாண்மைக்கு எதிராகத் தொடர்ந்துசவால்விட்டுவரும்இலங்கை அரசின் போக்கை வேடிக்கை பார்ப்பது இந்திய அரசின் ஆளுமையைக் கேள்விக்குறியாக் கியுள்ளது. தமிழக மீனவர்களைப் பாதுகாக்க இந்திய அரசு முன்வர வேண்டும்.

### தடையை நீக்க வேண்டும்

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மக்கள் இயக்கமாக அங்கீகரிக்க வேண்டும் எனவும், விடுதலைப் புலிகள் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ள நாடுகள் அதை முற்றிலும் கைவிட வேண் டும் எனவும், இந்திய அரசு விடுதலைப் புலிகள் மிதான தடையை உடனே நீக்க வேண்டும் எனவும் இந்த மாநாடு வலி யுறுத்துகின்றது.

இலங்கை இராணுவத்தால் பலியானவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துவதும் இரங்கல் தெரிவிப்பதும் ஜனநாயக உரிமை ஆகும். ஆனால், தடையைக் காரணம் காட்டி இரங்கல் தெரிவிக்கக்கூடாது என்று சிலர் அரசியல் ஆதாயத்திறகாக ஆவேசப்படுவது வேடிக்கையாக உள்ளது. இது ஜனநாயகத்திற்கும் மனித நேயத்திற்கும் எதிரான போக்கு என்று மாநாடு சுட்டிக்காட்டு கின்றது என்பது உள்ளிட்ட தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் ஜேர்மனியைச் சேர்ந்த டாக்டர் எல்மன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், சிறிலங்காவின் புதிய இடதுசாரி முன்னணிக் கட்சியின் நிர்வாகி மத்தியகுழு உறுப்பினராக குமாரசிங்க ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

*சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில்*

# குடாநாட்டில் காணாமல் போனவற்றில் 14 சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டன

## சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் களவாடப்பட்ட 14 சைக்கிள்களைச் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.லுடவைக் தலைமையில் சென்றபொலிஸ் குழுவினர் மீட்டுள்ளனர்.

சுன்னாகம் பொலிஸார் - பொலிஸ் நிலையத்திற்கு முன்னாள் நேற்று முன்தினம் வீதியில் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்திற்கிடமான முறையில் வந்த ஒருவரை விசாரணை செய்ததைத் தொடர்ந்து சைக்கிள் திருட்டுகளுடன் தொடர்புடைய மூவர் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி உபபரிசோதகர் மலகீரா, உப பரிசோதகர் பிரியதர்சனா மற்றும் பொலிஸ் அலுவலர்களாக குணசேகரம், காளிதாசன், அனுசா, சசிகா, சமரக்கோன் ஆகியோருடன் ஏனையவர்களும் இணைந்து இந்தச் சைக்கிள்களை மீட்டுள்ளார்கள்.

குருநகர், நல்லூர், அரியாலைப் பகுதிகளில் இருந்து நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சைக்கிள் விற்பனையில் ஈடுபட்டுபவர் எனக் கருதப்படும் பெண் ஒருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். சைக்கிள்கள் அரியாலை, குருநகர், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. (203-68)



யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டுக்களின் சூத்திரதாரிகள் எனக் கருதப்படும் நால்வர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து மீட்கப்பட்ட சைக்கிள்களுடன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய பொலிஸ் குழுவினரையும் படத்தில் காணலாம்.

(படம்: நேசன்)

## நாளை

| | |
|---|---|
| தை - 16 | புதன்கிழமை |
| | 30.01.2008 |
| திதி : அட்டமி | பி.இ. 01.05 |
| நட்சத்திரம் : | சுவாதி |
| | மு.இ. 08.33 |
| சுபநேரம் | : 05.06 - 06.38 |
| ராகுகாலம் | : 12.36 - 02.06 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகச் சொற்பொழிவு

சங்கானை,ஜன.29

சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்தம் இடம்பெர் ரும் ஆன்மீகச் சொற் பொழிவு நிகழ்வில் எதிர்வரும் வெள்ளி ழமை 'அனுபூதி' என்னும் தலைப்பில் பருத்தித்துறை சே ச்சிரம சுவாமி சித்ரூபானந்த சொற்பொழிவாற்றவுள்ளார். (203-29)


## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre
(நாதன்ஸ் சினிமா முன்பாக மேல்மாடியில்)

Spoken English with grammar

"சிங்களம்"

Short hand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன. புதிய பிரிவு ஆரம்பம் 30.01.2008 பாட முடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கு "ஆங்கிலம் குறுகிய காலத்தில் பேசுவதற்கு கற்றுக் கொடுக்கப்படும்.

இயக்குனர் : இ.லோகநாயகி


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சின்னத்துரை புஸ்பவதி (அம்மா)

தோற்றம் 14-04-1943

மறைவு 09-02-2007

திதி: 29.01.2008

காலனுக்கு கருணை இல்லை
எம்கவலைக்கு முடிவும் இல்லை
எங்கள் அம்மா விழ்ந்ததும்
சோகம் எம்மை சூழ்ந்தது
எம்கதைகளும் சோகத்தில் ஆழ்ந்தது
காலமெல்லாம் எம்மை கண்ணீர் சிந்தவிட்டு
சென்றதும் ஏனோ
பிள்ளைகள் நாம் கதறுகிறோம்

குடும்பத்தினர்.

சிவன் புதுவீதி,
நல்லூர்.

## வேலைக்கான ஆள்சேர்ப்பு

கல்லூரியின் கட்டடங்கள் மற்றும் கதவு, யன்னல்கள் புனருத்தாரணம் செய்வதற்காக கல்லூரியின் பழைய மாணவர் களால் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தகுதியான தொழிலாளர்களை ஒருவருட ஒப்பந்தத்தில் நியமிக்க உள்ளோம். தகுதியுடையோர் கிராம உத்தியோகத்தரின் சிபாரிசு, தேசிய அடையாள அட்டைப் பிரதி மற்றும் தொழில் சான்றிதழ், அனுபவ சான்றிதழ் ஆகியவற்றுடன் 02.02.2008 இற்கு முன்பு கல்லூரி அதிபருக்கு விண்ணப்பிக்கவும். தெரிவு செய்யப்படுவோர் வார/ பொது விடுமுறை நாள்களில் வேலை செய்தல் வேண்டும். செவ்வாய், புதன் கிழமைகளில் விடுமுறை வழங்கப்படும்.

1. தச்சுத்தொழிலாளர் : 10 வருட கட்டட நிர்மாண மற்றும் தளபாட தயாரிப்பு அனுபவத்துடன் தேவையான கருவிகள், உபகரணங்கள் உடையவர்கள்.
2. மேசன் தொழிலாளர்கள் : 10 வருட கட்டட நிர்மாண அனுபவத்துடன் கருவிகள், உபகரணங்கள் உடையவர்கள்.
3. உதவித் தொழிலாளர் : 3 வருட தச்சுத்தொழில்/ மேசன் தொழில் உதவியாளராக வேலை அனுபவம்.

குறிப்பு: பாடசாலையில் இருந்து 8 கி.மீ தூரத்திற்குள் வதிவோர் விரும்பத்தக்கது.

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
கல்வி அபிவிருத்தி நிதியம்.

(சி/551253)

## நீங்கா நினைவுகளுடன் மூன்று வருடம்

மண்ணில் 02 ★ 04 ★ 1983



விண்ணில் 01 ★ 02 ★ 2005

அமரர்

கந்தையா நந்தகுமார் (தங்கத்தாமரை)

(கரம்பைக்குறிச்சி மேற்கு, வரணி)

திதி : 29.01.2008

வரணி மண்ணில் வானோங்க வாழ்ந்திரோ!
இன்று விண்ணுலகம் சென்று மூன்றாண்டு ஆனதுவோ!
எமக்கெல்லாம் கலங்கரை விளக்கானீர்
அதை எம் நினைவுகளில் ஒளியாக்கித் தொழுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நினைவுகளுடன்!
குடும்பத்தினர்.

கரம்பைக்குறிச்சி மேற்கு,
வரணி. (70566)

## சில்லாலையில் இலவச ஆயுள்வேத நடமாடும் சேவை

வலி.தென்மேற்கு,ஜன.29

சில்லாலை சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தில் இன்று செவ்வாய் க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இலவச ஆயுள்வேத நடமாடும் சேவை ஒன்று இடம் பெறவுள்ளது.

இதில் பண்டத்தரிப்புப் பிரதேச ஆயுவேத வைத்திய அதிகாரி சிகிச்சைகளை வழங்கவுள்ளார். (203-135)

## வலி.தென்மேற்குப் பிரதேச விவசாயக் குழுக்கூட்டம்

வலி.தென்மேற்கு,ஜன.29

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் 31ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு இப்பிரதேச விவசாயிகள் சம்மேளனங்களில் தலைவர், செயலாளர்களை பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கடித மூலம் கேட்டுள்ளார்.

இதேவேளை - பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு நடை பெற வுள்ளது. இக்கூட்டத்தில் அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வர். (203-135)

## மெய்வன்மைப் போட்டிகள்

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்குக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட் டக் கல்விப் பணிப்பாளர் ச.கயிலாசநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ்.சிறுவர் பாதுகாப்பு நிதிய கல்வித் திட்டமிடல் அதிகாரி பெனடிக்ற் செல்வறஜித்தும் கலந்து கொள்வார். துறைசார் விருந்தினராகத் தெல்லிப்பழைக் கோட்ட ஆசிரிய ஆலோசகர் த.சிவராஜா கலந்து கொள்வர். (203)

* * *

பருத்தித்துறை,ஜன.29

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி யின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும் பெயர் வளைவு திரைநீக்க விழாவும் எதிர் வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை அதிபர் திருமதி எஸ்.சுகுமார் தலைமையல் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் வழங்குவார். (203-218)

## விரிவுரைகள் 02.02.2008 இல் ஆரம்பம்

27.01.2008 ஆம் திகதிய உதயனின் 4 ஆம் பக்கத்தில் வெளியான Forut வெளிவாரிப் பட்டப்படிப்புகள் விளம்பரத்தில் -

விரிவுரைகள் 02.01.2008 இல் ஆரம்பமாகும் எனத் தவறுதலாகப் பிரசுரமாகி விட்டது.

02.02.2008 அன்றே விரிவுரைகள் ஆரம்பமாகின்றன. திருத்தி வாசிக்கவும்.

## தவறிவிட்டது

சண்முகலிங்கம் கோகுலசிறி ஜெயபுரம், பூநகரி என்னும் முகவரியுடைய தே.அ.அட்டை (750724663V) ஓட்டுமடத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நியூ ஆனிதா நகைமாடம், 213D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (70582)


ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com

Learn French the French Way

பிரெஞ்சு மொழி வகுப்புகள்

புதிய பிரிவு

யாழ்ப்பாணத்திலேயே பிரெஞ்சு மொழி கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்! மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் புரிவோர், ஆர்வமுள்ள எவரும் கற்கலாம். அனைவருக்குமான புதிய வகுப்புக்கள் 09.02.2008 சனிக்கிழமை அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம். கட்டணம் மற்றும் ஏனைய விவரங்களை நேரில் அல்லது தொலைபேசியின் ஊடாகக் கேட்டறியலாம்.

ஆசிரியர்கள்: பிரான்சியரும், பிரெஞ்சு மொழியில் தகைமை பெற்றவர்களும்.

(கற்பதற்கு ஆங்கில அறிவு அவசியமில்லை) (70590)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

றோசலின் நல்லான்



மலர்வு 22-04-1932 உதிர்வு 29-01-2006

ஆண்டுகள் இரண்டான போதும்
ஆறவில்லை எம் துயரம்
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எம்மை விட்டு அகலாது.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (70425)

## துயர் பகிர்கின்றோம்



அருளம்பலம் ஜெயவீரசிங்கம்

அன்பிற்கும், அரவணைப்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும், கடமைக்கும், கண்ணியத்திற்கும், கண்டிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்கும், நேர்மைக்கும், உறைவிடமாக விளங்கிய எமது "அங்கிள்" அமரர் அருளம்பலம் ஜெயவீரசிங்கம் எம்மத்தியில் ஒரு இலக்கணம் மட்டுமல்ல. அவரின் வாழ்க்கை ஓர் இலக்கியமாகும். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இன்றைய நாளில் 29.01.2008 ஆஸ்திரேலியாவில் நடைபெறும் அவரது நல்லடக்க நிகழ்வில் ஆத்மாவின் நித்திய இளைப்பாற்றுதலுக்காகவும் நீங்கா வெளிச்சத்திற்காகவும் ஆண்டவரிடம் பிரார்த்திக்கின்றோம்.

19/2, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (70584)

V.S.மகேந்திரன்
குடும்பம்.

## பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

விசாகேசஐயர் பெண் புவனேஸ்வரி அம்மாள்
அரசகேசரி பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி
யாழ்ப்பாணம். - வழக்காளி

எதிர்

வழ.இல.674/D

சிவகடாட்ச குருக்கள் விசாகேச ஐயர்
பத்திரகாளி அம்மன் கோயிலடி,
தாவடி, யாழ்ப்பாணம். - எதிராளி

இவ்வழக்கு 2007 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் ஆஜராக இருக்கவும்,

எதிராளிக்கு அழைப்புக் கட்டளை 'உதயன்' பத்திரிகை ஊடாக பதில் சேவகம் செய்து திரும்பும் திகதியான இன்று எதிராளி மன்றில் சமுகமின்மையால் ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கமைய வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ1, வ2 ஆவணங்கள் ஆகியவற்றை வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியத்துடனும், வழக்கேட்டுடனும் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரியவாறு நிவாரணம்பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் 06.06.1990இல் நிறைவேறிய திருமணத்தை எதிராளி வேண்டுமென்றே வழக்காளியை விட்டு வன்ம உறவறுப்பு செய்த குற்றத்துக்காக ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானது எனக் கட்டளையிட்டு இதனால் பின்னுறுதித் தீர்வையிடப்படுகின்றது.

இவ்விவாகரத்துத் தீர்வைக்கு பின் வழக்காளி தன் கன்னிப் பெயரான சிதம்பரேஸ்வரசர்மா மகள் புவனேஸ்வரி அம்பாள் எனப் பாவிக்கலாம் எனவும், இதனால் பின்னுறுதித் தீர்வையாக்கப்பட்டு கட்டளையிடப்படுகிறது.

அத்துடன் வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் பிறந்த கிரிஷா என்ற பிள்ளையின் பாதுகாப்பும் பராமரிப்பும் தொடர்ந்து வழக்காளி பிள்ளையின் தாயாரிடமும் இருக்கலாம் எனவும் இதனால் பின்னுறுதித் தீர்வையளிக்கப்பட்டு கட்டளையிடடப்படுகிறது.

இந்தப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி 'உதயன்' பத்திரிகையில் விளம்பரப்படுத்தல் மூலம் எதிராளிக்கு பதிற்சேவகம் செய்யப்பட்டு 3 மாத காலத்துள் எதிராளி ஆட்சேபனை அணைக்காவிடின் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வை ஆக்கப்படும்.

2007ஆம் ஆண்டு கார்த்திகை 15 ஆம் திகதி.

ஒப்பம்: இ.த.விக்னராஜா
மாவட்டநீதிபதி,யாழ்ப்பாணம்.

வரைபு:
வழக்காளியின் சட்டத்தரணி.

நீமன்றக் கட்டளைப்படி
நு.சிறிமோகன்,
பதிவாளர்,மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிலெய்ட் டெஸ்ட் சமனிலையில் முடிவு போடர் - கவாஸ்கர் கிண்ணம் ஆஸி. வசம்

அடிலெய்ட், ஜன. 29

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளிடையே அடிலெய்ட்டில் நடைபெற்றுவந்த 4ஆவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவடைந்தது. இதன்மூலம் 4 போட்டிகள் கொண்ட போடர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரை ஆஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டது.

அடிலெய்ட் போட்டியின் நேற்றைய 5ஆம் நாள் ஆட்டத்தில் 2ஆவது இன்னிங்ஸைத் தொடர்ந்து ஆடிய இந்திய அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 269 ஓட்டங்களைக் குவித்து 'டிக்ளேயர்' செய்தது. இதன்மூலம் ஆஸியின் வெற்றியிலக்காக 232 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. எனினும், ஆட்டம் முடிவடைய சில ஓவர்களேயிருந்த நிலையில் ஆட்டத்தைச் சமனிலையில் முடிக்க இரு அணித்தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். இதனால் அடிலெய்ட்டில் நடைபெற்றுவந்த இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவடைந்தது.



வெற்றிக் கிண்ணத்துடன் பொண்டிங்

இந்தப் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 526 ஓட்டங்களையும், ஆஸ்திரேலியா 563 ஓட்டங்களையும் எடுத்தன.

தொடர்ந்து 2ஆம் இன்னிங்ஸை ஆடிய இந்திய 4ஆம் நாளான நேற்றுமுன்தினம் ஒரு விக்கெட் இழப்புக்கு 45 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்நிலையில் கடைசி நாளான நேற்று இந்தியாதனது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடியது.

இந்தியா அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தாலும், ஒரு முனையில் ஆரம்பவீரரான வீரேந்திர ஷேவாக் நிலையாக நின்று அபாரமாக ஆடி நம்பிக்கை தந்தார். அவர் அதிரடியாக ஆடி ஓட்டக்குவிப்பிலும் ஈடுபட்டார். இறுதியில் அவர் 151 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வீரேந்திர ஷேவாக்கிற்கு இது 13ஆவது சதமாகும். ஷேவாக் கடைசியாக அடித்த 9 சதங்களும் 150 ஓட்டங்களுக்கு மேற்பட்டவையே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணியின் மற்றைய வீரர்கள் எவரும் 20 ஓட்டங்களுக்கு மேல் பெறவில்லை. ஆஸி. மண்ணில் கடைசி டெஸ்ட்டில் விளையாடிய டெண்டுல்கர் 13 ஓட்டங்களையும், கங்குலி 18 ஓட்டங்களையும், டிராவிட் 11 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதியில் இந்திய அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 269 ஓட்டங்களை எடுத்திருந்த போது 'டிக்ளேயர்' செய்தது. ஆட்டம் முடியும் தறுவாய் என்பதால் ஆஸ்திரேலியா 2ஆவது இன்னிங்ஸை ஆடாமல் போட்டியைச் சமனிலையில் அறிவிக்க ஒப்புக்கொண்டது.

இந்தப் போட்டியின் நாயகனாக முதல் இன்னிங்ஸில் 153 ஓட்டங்களைக் குவித்த டெண்டுல்கர் தெரிவானார். தொடர் நாயகனாக 4 போட்டிகளிலும் 24 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பிரட் லீ தெரிவுசெய்யப்பட்டார்.

## டெஸ்ட் போட்டிகளிலிருந்து விடைபெற்றார் கில்கிறிஸ்ற்

சிட்னி, ஜன.29

கனத்த இதயத்துடன் டெஸ்ட் போட்டிகளிலிருந்து நேற்று விடைபெற்றார் கில்கிறிஸ்ற்.

அடிலெய்ட் டெஸ்ட் போட்டியின் கடைசி நாளான நேற்று களத்தடுப்பில் ஈடுபட களம் இறங்கிய போதும், போட்டி முடிவடைந்து மைதானத்தை விட்டு வெளியேறும் போதும் அடிலெய்ட் அரங்கில் இருந்த ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பி கில்கிறிஸ்ற்றுக்கு விடைகொடுத்தனர்.

இந்திய வீரர்களும் அவரை செல்லப் பெயரான 'கில்லி..கில்லி' என அழைத்து உற்சாகப்படுத்தினர். இவர் வெளியேறிய போது, எல்லைக் கோட்டில் இருந்து ஓடி வந்து இரசிகர் ஒருவர் கைகொடுத்தது என ஒவ்வொரு சம்பவமும் உணர்ச்சி மயமாக இருந்தது.

மைதானத்தில் நடுவில் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் நின்றவாறு ரசிகர்களின் வாழ்த்துகளைப் பெற்று அவர்களிடமிருந்து விடைபெற்றார் கில்கிறிஸ்ற்.

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்ச்சிக்கு காரணமான விக்கெட் காப்பாளர் என்ற உலக சாதனைக்கு சொந்தக்காரரான கில்கிறிஸ்ற்றின் ஓய்வு ஆஸ்திரேலிய அணிக்கு பெரும் இழப்பாக அமைந்து விட்டது.

### சிம்பாப்வேக்கு எதிரான 3ஆவது போட்டி

## அப்ரிடி சிக்ஸர் மழை பாகிஸ்தான் வெற்றி

முல்தான், ஜன.29

சிம்பாப்வேக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. பாகிஸ்தானின் சகலதுறை வீரர் சயீட் அப்ரிடி 6 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 85 ஓட்டங்களை விளாசி தனது அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். இந்த வெற்றியின் மூலம் இன்னும் 2 போட்டிகள் மீதமிருக்க ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி 3-0 என்ற கணக்கில் தனதாக்கிக்கொண்டது.

பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகளிற்கிடையிலான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி முல்தானில் நேற்றுமுன்தினம் நடந்தது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 272 ஓட்டங்களைச் சேர்த்தது. ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 78 ஓட்டங்கள் என்ற நெருக்கடியில் இருந்த பாகிஸ்தான் அணியை அப்ரிடி தனது அதிரடி மூலம் காப்பாற்றினார். சிக்ஸர் மழை பொழிந்த அவர் 52 பந்துகளில் 2 பவுண்டரிகள், 6 சிக்ஸர்களுடன் 85 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் ஒருநாள் போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ள இலங்கை வீரர் ஜெயசூரியாவின் 245 சிக்ஸர்கள் என்ற சாதனையை அப்ரிடி சமன் செய்தார்.

இலக்கைக் கலைத்த சிம்பாப்வே அணியால் 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 235 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. அதனால் 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. சிம்பாப்வே அணியில் அதிகபட்சமாக வில்லியம்ஸ் 71 ஓட்டங்களையும், ரெய்லர் 55 ஓட்டங்களையும் எடுத்தனர். அப்ரிடி ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

### மேற்கிந்தியத் தீவுகளுடனான 3ஆவது போட்டி

## வாகை சூடியது தென்னாபிரிக்கா

போர்ட் எலிசபெத், ஜன.29

ஜக் கலிஸ் அபாரமாக ஆடி சதம் விளாச மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளிடையே 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 3ஆவது ஒருநாள் போட்டி போர்ட் எலிசபெத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 252 ஓட்டங்களை எடுத்தது. அதிரடியாக ஆடிய சாமுவேல்ஸ் 88 பந்துகளில் 98 ஓட்டங்களை விளாசினார். இதில் 7 பவுண்டரிகளும், 4 சிக்ஸர்களும் அடங்குகின்றன.

தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்க அணி 48.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 256 ஓட்டங்களைச் சேர்த்து 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியை ருசித்தது. தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரரான ஜக் கலிஸ் 121 ஓட்டங்களை (133 பந்துகள், 12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இது அவருக்கு 16ஆவது ஒருநாள் சதமாகும்.

ஏற்கனவே முதல் இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றிருப்பதால் நேற்றுமுன்தினம் பெற்ற வெற்றியுடன் தொடரையும் அந்த அணி கைப்பற்றிவிட்டது. 4ஆவது ஒருநாள் போட்டி பெப்ரவரி [illegible]

## மரண அறிவித்தல்

### செல்லையா யோகநாதன்

(முன்னாள் உதவி அரச அதிபர்-பிரபல எழுத்தாளர்)



கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிட மாகவும் கொண்ட செல்லையா யோகநாதன் நேற்று (28.01.2008) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா தம்பதியினரின் அன்பு மகனும், சிவராமலிங்கம் தம்பதியினரின் மருமகனும், சுந்தரலட்சுமியின் அன்புக் கணவரும், Dr. சத்யன்(U.k), Dr. ஜெயபாரதி (கொழும்பு) ஆகியோரின் அன்பத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (30.01.2008) புதன் கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்குத் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

4/4, மூத்த விநாயகர் முதலாம் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
TP. 021 222 7021

தகவல்:
[illegible]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆச்சிப்பிள்ளை சுப்பிரமணியம்



சங்கரத்தையை பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட ஆச்சிப் பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (28.01.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை -அன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் , காலஞ்சென்றவர்களான அருணாசலம்-சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்,இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, புஸ்பராணி, (கொலண்ட்), பத்மநாதன் (சுவிஸ்), தங்கராணி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசரத்தினம்,தேவபாலன்,விஜயலக்சுமி(சோதி),ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சதீஸ்குமார்,ஊர்மிலா, கங்கைஅமரன், சுகந்தினி (ஆசிரியர்,யா/உடுவில் மான்ஸ் ம.வி), உதயகுமாரன், முருகானந்தன், நிர்மலேந்திரன், ரமேஜினி, ரஜிதா,அபிராமி, ரஜீவன், கஜரஜன், கஜானன்,வினுஜா,பானு ,அனு, அபிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நர்த்தனா, சம்பத்மேனன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.01.2008) திங்கட் கிழமை நடைபெற்றன.

கந்தசாமி கோயிலடி.
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
சு.பத்மநாதன் (மகன்)

### செல்லத்துரை சண்முகதாஸ்

(அரச நில அளவையாளர்)



100,சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும், செங்குந்தா வீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் (வன்கூவர்) வசித்து வருபவருமான செல்லத்துரை சண்முகதாஸ் (27.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - நாகேஸ்வரி தம்பதியின் அன்பு மகனும், சுமதியின் அன்புக்கணவரும்,சுஜிதா,மகிந்தா, டிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும்,மோகனதாஸ்,யோகதாஸ், சரோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவானி, உதயசெல்வி, இராஜகுலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், சுதர்சனனின் மாமனாரும் , ரிஷி, ஜனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் கனடாவில் நடைபெறும்.

27,புலவனார் வீதி,
நல்லூர் வடக்கு.
011-2610281

தகவல்:
செ.யோகதாஸ் (சகோதரன்)
லயன் இராஜகுலேந்திரன் (மைத்துனன்)

### கதிர்காமு இரத்தினம்

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும், பாலாவோடை, களபூமியை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு இரத்தினம் நேற்று முன்தினம்(27.01.2008) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் லோகேஸ்வரன், புவனேஸ்வரி, பூபாலகிஷ்ணன், இராசேஸ்வரி, மேகணாநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திலகேஸ்வரி, சண்முகராசா,யோகேஸ்வரி,ரத்தினசிங்கம், சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரிகைக்கு களபூமி தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள் ளவும்.

பாலாவோடை,
களபூமி,காரைநகர்.

தக்வல்:
இரத்தினசிங்கம்
இராசேஸ்வரி
( இராசு - மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெப்பிற்றிக்கொலாவப் பகுதியில் கண்டெடுத்த சடலங்களைப் புதைக்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜன. 29

அநுராதபுரம் மாவட்டம் கெப்பிற்றிகொலாவ கிரிகேட்டுவாவ என்ற இடத்தில் இருந்து மீட்கப்பட்ட 16 சடலங்களையும் விசாரணைகளுக்காக மீண்டும் தோண்டி எடுக்கத்தக்க வகையில் புதைக்குமாறு அநுராதபுர மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கிரிகெட்டுவாவவில் உள்ள இரண்டு புதை குழிகளில் இருந்து கடந்த 24 ஆம் திகதி மீட்கப்பட்ட இந்தச் சடலங்கள் கடத்தப்பட்டு காணாமல்போன தமிழ் மக்களினுடையவையாக இருக்கலாம் என்ற சந்தேகம் பல்வேறுமட்டங்களிலும் வலுவாக இருந்தபோதும் இன்றுவரை அவை உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தச் சடலங்கள் உருக்குலைந்திருந்ததால் அதனை அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை உள்ளது என அநுராதபுரம் மருத்துவமனை மரண விசாரணை அதிகாரி சரத் வீரபண்டார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு-

வைத்தியசாலைக்குப் பலர் வருகை தந்தபோதும் அவர்கள் தெரிவித்த தடயங்களும் சடலங்களில் இருந்த தடயங்களும் ஒத்துப் போகவில்லை. சடலங்களைப் புகைப்படம் எடுத்தும், வீடியோ எடுத்தும் வைத்திருக்கின்றோம். தேவைப்படும் பட்சத்தில் அதனைக் காணாமல் போனவர்களின் உறவினர்கள் பார்வையிடலாம்.

சடலங்கள் அடையாளம் காண்படாத நிலையிலும் சடலங்கள் குறித்த மரண விசாரணையைப் பதவியாவைச் சேர்ந்த பொலிஸார் மூன்றுபிரிவாக மேற்கொண்டு வந்தனர். அந்த விசாரணைகளின் அறிக்கையை நேற்று அநுதாரபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் பொலிஸார் சமர்ப்பித்தனர்.

துப்பாக்கியால் சுடப்பட்டே இவர்கள் அனைவரும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## பிரபல எழுத்தாளர் செ.யோகநாதன் காலமானார்

யாழ்ப்பாணம்,ஜன.29



ஈழத்தின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான செ.யோகநாதன் தமது 66 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். இவர் தமிழகத்திலும் நன்கு அறியப் பட்டவர். ''கலைச்செல்வி'' பண்ணையில் வளர்ந்த இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1960-1964 களில் முகிழ்த்த சிறுகதை எழுத்தாளர் குழுமத்தில் ஒருவர். பின்னர் தமிழக பத்திரிகைகளிலும் நிறைய எழுதியுள்ளார்.

இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி அவர் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த வேளையிலேயே வெளி வந்துவிட்டது.அதன் பின்னர் ''கண்ணீர் விட்டே வளர்த்தோம்'' உட்பட தமது சிறுகதைத் தொகுதிகள் சிலவற்றை வெளியிட்டார். தமது குறுநாவல்களையும் மூன்று தொகுதிகளாக வெளியிட்டிருந்தார்.

தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைகளை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டு அவர்களை தமிழக வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியவர்.

இவரது படைப்புக்களுக்கு இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் பரிசில்களும்,விருதுகளும் கிடைத்தன.

குழந்தை இலக்கியத்திலும் அதிக ஈடுபாடு காட்டிய செ.யோ அத்துறையில் பல நூல்களை எழுதியதுடன் மூன்று சிறுவர் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் விளங்கினார்.

திரைப்படத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் இணை இயக்குநராகவும் செயற்பட்டார்.

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றியிருந்தார்.

(அ)

## பிள்ளையான் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் தேர்தல் நடைபெறவேண்டும் என்று விரும்புகின்ற ஒரேயொரு கட்சி எமது கட்சிதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் தேர்தலை விரும்பவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் எதிரிகள் கிழக்கில் பலமாக இருக்கின்றனர். அவர்களுடன் போட்டிபோட இக்கட்சிகள் அஞ்சுகின்றன.

### நாம் தேர்தலை முழுமையாக விரும்புகிறோம்

இதன் காரணமாக தேர்தல் ஒன்றை இக்கட்சிகள் விரும்பவில்லை. நாம் தேர்தலை முழுமையாக விரும்புகிறோம். நாம் தேர்தலை விரும்புவதாலேயே நாம் அவர்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றோம் என்று அக்கட்சிகள் கூறுகின்றன. நாம் யாருக்கும் அச்சுறுத்தலாக இல்லை. ஜனநாயக ரீதியில் மக்களுக்குச் சேவையாற்றுவதே எமது நோக்கம்.

கிழக்கில் நாங்கள் மாத்திரம் ஆயுதங்கள் வைத்திருக்கவில்லை. ஈ.பி.டி.பியினரும் ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். ஆனால், எம்மிடம் ஆயுதங்கள் இருக்கின்றன என்பதை நாம் பகிரங்கமாகவே கூறியிருக்கின்றோம். ஆனால், கிழக்கில் தேர்தல் நடந்து வருவதை அரசு தீர்மானித்து, தேர்தல் அறிவிப்பை விடுத்தவுடனேயே நாம் எமது ஆயுதப் பிரிவை முடக்கி வைத்து விட்டோம்.

கிழக்கில் நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்று நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காகவே நாம் இந்த முடிவை எடுத்தோம்.

நாம் இப்போது நிராயுதபாணிகளாக - பொலிஸாரின் பாதுகாப்புடன் மட்டும் - தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம். நாம் ஏனைய கட்சி வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளோம் என்று கூறப்படுவதை ஒருபோதும் ஏற்கமுடியாது. - என்றார் அவர். (அ-சி)

## 60ஆவது சுதந்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டியே அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுதந்திர நிகழ்வில் கலந்துகொள்வதில்லை என்று அக்கட்சி தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியால் பெற்றுக் கொடுக்கப்பட்ட இலங்கைக்கான சுதந்திரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது தொலைக்க வைத்து விட்டார். இந்நாட்டு மக்கள் சுதந்திரம் எதுவுமில்லாமல் வாழ்கின்றனர்.

இந்நிலையில், பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் 60ஆவது சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதனையொட்டி அரசு ஏற்பாடு செய்திருக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அரசு எமது கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

நாம் பெற்றுக்கொடுத்த சுதந்திரத்தை மஹிந்த தொலைத்து விட்டதால் நாம் அரசின் நிகழ்வில் கலந்துகொள்வதில்லை என்று தீர்மானித்திருக்கிறோம்.

ஆனால், சுதந்திர தினத்தன்று நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட சர்வமத வழிபாடுகளில் ஈடுபட நாம் முடிவு செய்திருக்கிறோம்.

நாடு முழுவதிலும் உள்ள விகாரைகள், பள்ளிவாசல்கள், இந்துக் கோவில்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் போன்றவற்றில் பெப்ரவரி 4ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இச்சமய வழிபாடுகள் ஆரம்பமாகும்.

இச்சமய வழிபாடுகளில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு நாம் அனைவருக்கும் பகிரங்க அழைப்பு விடுக்கின்றோம்.

இச்சமய வழிபாடுகள் இந்நாட்டை அழிவிலிருந்து மீட்கும் எமது நடவடிக்கையின் ஆரம்பமாக அமையும் - என்றார் அவர்.

## மன்னாரில் கடத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார், பனங்கட்டுக்கோட்டுப் பகுதியில் வசிக்கும் மீன் வியாபாரியான ரவி என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். நேற்றுக்காலை அப் பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்த அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே இந்தச் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 11.30 மணியளவில் சடலத்தைப் பார்வையிட்ட மன்னார் மாவட்ட நீதிவான் ரி.கே.பிரபாகரன் பிரதே பிசோதனைக்காக சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (சி)

## பலாலி மீது நேற்று ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில தகவல்கள் தெரிவித்தன.

திடீர் தாக்குதல்களை குடாநாட்டில் பெரும் பதற்றம் உண்டானது.

அதேசமயம், யாழ்.குடாநாட்டு வீதிகளில் படையினரின் வாகனத் தொடரணிப் போக்குவரத்துகளும் நேற்று நிறுத்தப்பட்டன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வரணி, கரம்பைக் குறிச்சி, உசன் போன்ற பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. அதனால் தென்மராட்சியில் மக்கள் மத்தியிலும் பதற்றம் ஏற்பட்டது. எனினும், இத்தாக்குதல்களினால் பொதுமக்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(அ-உ-207)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இருந்து நேற்று ஷெல் தாக்குதல்களை நடத்தினர். அவர்கள் ஏவிய ஷெல்களில் சுமார் 15 ஷெல்கள் பலாலித் தளத்தை அண்மித்த சுற்றாடலில் வீழ்ந்து வெடித்தன.

இதனால், படையினரின் உடைமைகளுக்கோ அல்லது படையினருக்கோ எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை.

பூநகரியின் கல்முனைப் பகுதியை நோக்கி நாங்கள் ஷெல் மற்றும் பல்குழல் பீரங்கிகளைக் கொண்டு பதில் தாக்குதல்கள் நடத்தி அவர்களுடைய தாக்குதல்களை முறியடித்திருக்கிறோம்.

திட்டமிட்டபடி இராணுவத்தினர் பயிற்சி பெற்று வெளியேறுகின்ற வைபவம் யாழ். கட்டளைத் தளபதி சந்திரசிறியின் முன்னிலையில் நடைபெற்றுமுடிந்தது.

இந்த வைபவத்திற்கு முக்கியமான அதிகாரிகள் அங்கு செல்வதற்கான ஏற்பாடுகள் இருக்கவில்லை. ஏற்கனவே பலாலி செல்வதற்குத் திட்டமிட்டிருந்தார்களோ என எனக்குத் தெரியாது.

முக்கிய அதிகாரிகள் எவரும் அங்கு சென்றனர் என்று அறிக்கைகள் எதுவும் கிடைக்கவில்லை. பலாலிக்கும் கொழும்புக்கும் இடையிலான விமானசேவைகள் எந்தவித பாதிப்பும் இன்றி தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன - என்றார். (அ-சி)

## தினகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை. (அ-1)

## இருபது வருடங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. அப்போது மஹிந்த ராஜபக்ஷவும் அதை எதிர்த்தார்.

தீர்வு யோசனையை நடைமுறைப்படுத்த விடாமல் ஜே.வி.பியினர் பலரைக் கொலை செய்துள்ளனர். இதன் காரணமாக யுத்தம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால், 20 வருடங்களுக்கு முன் அத்தீர்வை எதிர்த்த மஹிந்த ராஜபக்ஷ இப்போது அதையே தீர்வுயோசனையாக முன்வைத்திருக்கிறார். அன்றே அதை அவர் ஏற்றிருந்தால் பிரபாகரனும் அப்போது அதனை ஏற்றிருப்பார். யுத்தம் முடிவுக்கு வந்திருக்கும்.

அப்போது இவர்கள் ஏற்காததன் காரணமாகவே இருபது வருடங்களாக இந்த யுத்தம் தொடர்ந்து, நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, ஆயிரக்கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டன.

அப்படியென்றால் இத்தனை உயிர்கள் கொல்லப்பட்டமைக்கு மஹிந்த ராஜபக்ஷவும் காரணமாக இருந்திருக்கிறார்.

எனவே, இப்போது இத்தீர்வை ஏற்கும் மஹிந்த இந்த இருபது வருட யுத்தத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

இந்நாட்டு மக்களிடம் அதற்காக அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும்.

13ஆவது திருத்தச்சட்டம் அரசமைப்பில் உள்ளது. அதை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு எவருடைய ஆலோசனையும், அங்கீகாரமும் தேவையில்லை. இதற்கென சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டமை மக்களை ஏமாற்றும் நாடகமாகும்.

### 20 வருடங்களின் பின் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் அவர் ஏற்பார்

ஐ.தே.கட்சி கொண்டுவந்த தீர்வு யோசனை தான் சரி என்று 20 வருடங்கள் கழித்து மஹிந்த ராஜபக்ஷ ஏற்றிருக்கிறார். அதேபோல் ஐ.தே. கட்சி கொண்டுவந்த யுத்தநிறுத்த ஒப்பந்தமும் சரியானதே என்று அவர் இன்னும் 20 வருடங்கள் கழித்து அதை ஏற்றுக்கொள்வார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எல்லாம் காலம் கடந்த ஞானமாகவே இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒருவரால் தேசிய பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது. காலத்திற்கேற்றவாறு - பிரச்சினையின் தன்மைக்கு ஏற்றவாறு - பிரச்சினையைத் தீர்க்கும் திறன் அவரிடமில்லை.

ஆனால், தேசியப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஐ.தே.கட்சி என்றும் ஒரே நிலைப்பாட்டில்தான் இருக்கிறது. நாட்டை இரண்டாகப் பிரிக்காது அதிகாரப் பகிர்வு மூலமே தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில் என்றைக்கும் மாற்றம் கிடையாது - என்றார். (அ-சி)

## தட்சணாமருத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் -

அவற்றில் சில புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தட்சணாமருதமடு அகதிமுகாம் மீது வீழ்ந்தன என்றும் - வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

அதன்போது றாகினி பீரிஸ் (வயது - 14), அந்தோனிபீரிஸ்மேரி (வயது -42), முனியாண்டி குணராசா (வயது - 42) ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

போர்ச் சூழல் காரணமாக பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் மன்னங்குளம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து குறிப்பிட்ட அகதி முகாமில் இவர்கள் வசித்து வந்தனர் என்றும் கூறப்பட்டது. (சி)

SUNSHINE EXAM
A/L 2008 பரீட்சைக்குத் தோற்றும் கணித, விஞ்ஞான மாணவர்களுக்குரியது.
Phy. Che. Maths. Bio எனும் ஒழுங்கில் வாராந்தம் புதன்கிழமை 11 மணிக்கு நடைபெறும்.
நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்கள், விரிவுரையாளர்களால் நடத்தப்படும்.
வினாத்தாள் திருத்தித் தரப்படும்.
கலந்துரையாடல் நடைபெறும்.
விடைக்குறிப்பு வழங்கப்படும்.
எவரும் கலந்து கொள்ளலாம்.
ஆரம்பம் : 06.02.2008 புதன் 11A.M
தொடர்புகட்கு:
NEW SCIENCE CENTRE யாழ்நகர்.

BRAIN POWER INSTITUTE
A/L 2009, 2010
புதிய பிரிவுகள்
யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர் குழாம்
வணி.கல்வி- திரு.யசோ
பொருளியல்-திரு.கஜீதரன்
கணக்கீடு-திரு.பாலகஜன்
A/L 2008
PAPER CLASS
ஆரம்பம்:-
30.01.2008
புதன் மாலை 4மணி

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY-2008 A/L
UNIT-09
BIO-STATICS
ஆரம்பம்:- 30.01.2008
6.15-7.30 A.M
சு.பொன் திவாகரன்

A/L DAY CLASS வர்த்தகப் பிரிவு
வணிகக்கல்வி : திரு யசோ
பொருளியல் : திரு P.S.குமார்
கணக்கீடு : திரு பாலகஜன்
யாழ் நகரின் முன்னணி பெறுபேறு பெறுவதற்குக் காரணமாக அமைந்த ஒரே நிறுவனம்
ஆரம்பம் 30.01.2008 புதன் காலை 9.30
புதிய பிரிவு ஆரம்பம் A/L 2010
02.02.2008 சனி காலை 8
BEACON பெருமாள் கோயில் அருகில்
Proprietor: N.Poobalasingam

பொருளியல்
Paper Class
P.S.Kumaran
Start
02.02.2008 சனி
Beacon,
வெலிங்டன் சந்தி,

மரண அறிவித்தல்
முருகேசு செந்தமிழ்செல்வன்
சங்கானை குளத்தடி வீதியை பிறப்பிடமாக கொண்ட முருகேசு செந்தமிழ்செல்வன் நேற்று புதுக்குடியிருப்பு, வள்ளிபுனத்தில் காலமானார்.
அன்னார் அன்னலட்சுமியின் கணவரும் சந்திரகுமார், இராசகுலேந்திரன், மனோன்மணி, ஜெயானந்தசிங்கம், தயாநிதி ஆகியோரின் சகோதரனும் திரவியத்தின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
அராலிவீதி, சங்கானை.
தகவல்: மு.சந்திரகுமார் (சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.